# பொருளடக்கம்

**உள்ளடக்கம்** **பக்க இல.**


1. விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வரலாற்றுப் பின்னணி 01 - 02

2. நிறுவனத் தகவல்கள் 03 - 05

3. கௌரவ சுகாதார அமைச்சருக்கு வருடாந்த அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கான தலைவரின் கடிதம் 06

4. மனித வள அபிவிருத்தி 07 - 08

5. மருத்துவமனை சேவைகள் பகுப்பாய்வு 09 - 21

6. 2015 ஆம் ஆண்டில் பெற்ற பிரதான வெற்றிகள் 21 - 25

7. 2015டிசம்பர் 31 ஆம் திகதியிலான பரீட்சை மீதி 26 - 27

8. வருமான மற்றும் செலவுக் கணக்கு 2015டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான மற்றும் ஏனைய கணக்குக் கூற்று 28 - 43

9. 1971 ஆம் ஆண்டில் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் பிரிவு 14(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் சான்றிதழும் அறிக்கையும் 44 - 55

## தொலை நோக்கு

மிகவும் உயர்ந்த சுகாதாரப் பாதுகாப்பொன்றினை வழங்கி மற்றும் முன்னோடி வைத்தியசாலையாகவும் ஏனைய வைத்தியசாலைகளுக்கு உதாரணமாகவும் விளங்குதல்.

## குறிக்கோள்

பிரதேச மற்றும் நாட்டு மக்களின் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்று முகமாக வசதிகள் மற்றும் பணியாட் தொகுதியினரின் மற்றும் வினைத் திறன் மிக்க வகையில் பயன்படுத்தல். கண் நோய்கள் , நீரிழிவு மற்றும் காயங்களைக் குணப்படுத்தல் பொன்ற துறைகளில் அரசாங்க துறையானது சுகாதார வசதிகளை செய்து கொடுக்கும் நோக்கில் வைத்தியசாலையில் தற்போதுள்ள வசதிகளை விரிவுபடுத்துதல்.

## நிறுவனத்தின் நோக்கம்

இந்த வைத்தியசாலையின் நோக்கம் சிகிச்சைக்காக இவ் வைத்தியசாலைக்குவரும் பொதுமக்களுக்கு வேற்றுமைகள் காட்டாது கண் சிகிச்சை ,சத்திர சிகிச்சைமற்றும் நீரிழிவு பராமரிப்பு முகாமைத்துவ சேவை ஒன்றை உயர்ந்த தரத்தில் மேற்கொள்ளப்பட்டு வினைத் திறனுடன் கூடிய சுகாதார சேவைகளை வழங்குதல்.

# 2015 ஆம் ஆண்டுக்கான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு அறிக்கை

# 2015 ஜனவரி 01 தொடக்கம் 2015 டிசம்பர் 31 வரை

## வரலாற்றுப் பின்னணி

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை 1998 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கவிஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மன்ற சட்டமாகக் குறிப்பிடப்படும் பாராளுமன்றச் சட்டத் தின்மூலம் தாபிக்கப்பட்டு 1999 நவெம்பர் 12 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசி க் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை , 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதிகொல்லப்பட்ட மறைந்த திரு. விஜயகுமார துங்க அவர்களின் ஞாபகார்த்தமாக தாபிக்கப்பட்டது.சீதுவ பிரதேசத்தின் பிரதம தேரர் வண. பிரான்ஸிஸ் சுனன்த வணசிங்ஹ அவர்கள்,மனிதநேயமுடைய விஜயகுமாரதுங்க அவர்களின் ஞாபகம் நிலைத்திருப்பதற்கு அவர் பிறந்த,படித்த, வாழ்ந்த பிரதேசத்தின் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு வைத்தியசாலை ஒன்றைநிறுவுவதே சிறந்த வழி என அன்றைய இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த மாண்புமிகுசந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அந்தஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி, கட்டுநாயக்க/சீதுவ நகரசபை எல்லைக்குள் கொழும்பு, நீர்கொழும்பு நெடுஞ்சாலையில் சீதுவப் பகுதியில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் விஜயகுமாரதுங்க ஞாபகார்த்தமன்றத்தினால் இரண்டு வாட்டு (60 படுக்கைகள்) மற்றும் வெளி நோயாளர் பிரிவு என்பவற்றைஉள்ளடக்கியதாக ஒரு வைத்தியசாலை நிர்மானிக்கப்பட்டது. இந்த வைத்தியசாலைவிஜயகுமாரதுங்கவின் பிறந்த நாளான 1999 ஒக்டோபர் 09 ஆம் திகதியன்று அப்போதுஜனாதிபதியாக இருந்த மாண்புமிகு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களால்மக்கள் பாவனையின் பொருட்டு திறந்து வைக்கப்பட்டது. வைத்தியசாலையின் நிர்வாகம்பணிப்பாளர்கள் சபையினால் நிர்வகிக்கப்படுகிறது.

பணிப்பாளர்கள் சபை கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் அதேவேளை , விஜயகுமார துங்கஞாபகார்த்த வைத்தியசாலையின் நாளாந்த முகாமைத்துவத்தின் செயற்பாட்டு நிர்வாகம் ‘‘1999ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சபைசட்டத்தினால்’’ விஜயகுமாரதுங்க வைத்தியசாலை சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன்இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.அபிவிருத்தி பகுதி ஒன்றாக , 2004 ஆம் ஆண்டில் 88 படுக்கைகளுடன் கண் சிகிச்சை வாட்டுஒன்றையும் உள்ளடக்கியதாக தனியான கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போதுபடுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 148 ஆகும். பொதுமக்களுக்கு உயர்தரமான சேவையைவழங்கும் நோக்குடன் தற்போதைய தரங்கள் அதிகரிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக் கூடம்உள்ளடங்களாக முழுமையாக செயற்படும் கண்சிகிச்சை வாட்டு ஒன்று 2007 ஆம் ஆண்டில்திறந்து வைக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் பொது களஞ்சியப்படுத்தல் தேவைக்காகவும் மருத்துவ ஆவணங்கள்பேணும் அறை, கடமை அறைகள் மற்றும் விரிவுரை மண்டபம் போன்ற தேவைகளுக்காகவும்தனியான இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு 4,061சதுர அடியிலான இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து பூர்த்தி செய்ததோடு அது சாதாரண களஞ்சியப்படுத்தல் , வைத்திய அறிக்கைக் களஞ்சியம் , கடமை அறைமற்றும் கருத்தரங்கு மண்டபம் ஒன்று போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

4386 சதுர அடி மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு முடிந்துள்ளது. அதில் இரசாயன கூடம், காயங்கள் சிகிச்சைப் பிரிவு, விடுதி அறைகள் போன்ற வசதிகள் அடங்கப் பெற்றவை ஆகும். தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் (NERD)ஆலோசனைக்கு இணங்க ரூ. 12.431 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட கட்டிடம் 2015 இல் இருந்து பயன்படுத்தப்படுகின்றது.

வெற்றிடமான பிரதேசத்தில் சகல வாட்டுத் தொகுதிகள ஐந்தாக மாற்றிக் கொண்டு நோயாளர்களின் பயன்பாட்டிற்காக அதனை உபயோகிப்பதற்கு இதுவரை 164 கட்டில்களாக அதிகரித்து உள்ளன.

மருத்துவமனையின் முன் பக்கத்தில் உள்ள நிருவாகக் கட்டிடம் குறைந்த செலவில் நேர்ட் தொழினுட்பத்தின் மூலம் ரூ. 35 மில்லியன் செலவில் மேம்படுத்துவதற்கான யோசனை ஒன்று 2015 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டு அதன் அடிப்படை செயற்பாடுகள் இவ் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையின் அடிப்படை வசதிகள் ரூ. 1384 மில்லியன் செலவில் பாரிய அளவில் அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றினை அங்கீகரித்துள்ளது. நோயாளிகளுக்கு அன்றாடம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வைத்தியசாலை தற்பொழுதுள்ள அதிகமான அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் இந்த ஏழு மாடிகளைக் கொண்ட கட்டிட கருத்திட்டத்தின் அடிப்படை வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## நிறுவனத்தின் பெயர்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

## முகவரி

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,சீதுவை

## முகாமைத்துவம்

பணிப்பாளர் சபை மூலம்

## சட்ட வடிவம்

1999ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

## கணக்காய்வாளர்கள்

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், பத்தரமுல்ல.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு , சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,

  இல. 385, வண. பத்தேகம விமலவங்ச மாவத்தை,
  "சுவசிரிபாய"
  கொழும்பு 10.

## பணிப்பாளர் சபை

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை

சீதுவ

**01-01-2015 ~ 31-12-2015**

பேராசிரியர் கார்லோ பொன்சேகா

**தலைவர்**

திரு. (டாக்டர்) பாலித மஹிபால , சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

**பணிப்பாளர்**

திரு. என். ஏ. உமகிலிய, தொழில்சார் பிரதிநிதி

**பணிப்பாளர்**

திருமதி (டாக்டர்) பி. எஸ். ஜயலத், வைத்தியசாலைப் பிரதிநிதி

**பணிப்பாளர்**

திரு. (டாக்டர்) விமுக்தி குமாரதுங்க, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை மன்றத்தின் உறுப்பினர்
**(**கௌரவ சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் பிரதிநிதி)

**பணிப்பாளர்**

திரு. சமீர விக்கிரமசிங்க **(01-01-2015 இலிருந்து10-03-2015வரை),**
திரு. டப்ளியூ. எச். ஜி. கயான் கோசல **(10.03.2015இலிருந்து31-12-2015வரை), திறைசேரிப் பிரதிநிதி**

**பணிப்பாளர்**

திரு. சந்திரா விக்கிரமசிங்க

**பணிப்பாளர்**

## கணக்காய்வுக் குழு

## 01-01-2015 ~ 31-12-2015

திரு. சமீர விக்ரமசிங்க, திறைசேரி பிரதிநிதி**(01-01-2015** இலிருந்து**10-03-2015**வரை**)**

**தலைவர்**

திரு. டப்ளியூ. எச். ஜி. கயான் கோசல, திறைசேரிப் பிரதிநிதி

**(10-03-2015** இலிருந்து **31-12-201**வரை**)**

திரு. எஸ். ஆர். ராஜபக்ஷ, பிரதம கணக்காளர்,சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு நோக்குநர்

திரு. பீ. ஜி. ஐ. நிரஞ்ஜா, கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம் நோக்குநர்

திருமதி (டாக்டர்) பி. எஸ். ஜயலத், **M.O.I.C. , W.K.M.H.**

உறுப்பினர்

திருமதி கே. எம். வை. கே. கருணாரத்ன, கணக்காளர், **W.K.M.H.**

பங்கேற்பவர்

---

## வங்கியாளர்

இலங்கை வங்கி, சீதுவ

கௌரவ சுகாதார அமைச்சர்,

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,

385, வண. பத்தேகம விமலவன்ஷ தேரோ மாவத்தை,

"சுவசிறிபாய",

கொழும்பு – 10.

**<u>2015 ஆம் ஆண்டிற்கான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை நிருவாக சபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்கறிக்கைகளும்</u>**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (2) இன் பிரகாரம், 2015டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்தவைத்தியசாலை நிருவாக சபையின் ஆண்டறிக்கையையும் உரிய கணக் கு அ றிக்கைகளையும் விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சபையின் சார்பாக நான் சமர்ப்பிக்கின்றேன்.

நன்றி

விசுவாசத்துடன்

பேராசிரியர் கார்லோ பொன்சேகா.

தலைவர்,

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,

சீதுவை.

பிரதி :- செயலாளர், சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

# மனித வள அபிவிருத்தி

## A. 2015டிசம்பர் 31 ஆம் திகதியின் போதான பதவியணியினர் எண்ணிக்கை

1. நிறைவேற்று அலுவலர்கள்
   a. பொறுப்பு வைத்திய அதிகாரி
      தாதி உத்தியோகத்தர் — 04
   b. கணக்காளர்
   c. நிருவாக உத்தியோகத்தர்
2. நிபுணத்துவ வைத்தியர்கள் — 07
   a. நிரந்தர02
      (கண் சிகிச்சை வைத்தியர், வைத்தியர்)
   b. வெளி நோயாளர் 05
      (பொதுவான சத்திர சிகிச்சை மருத்துவர்,
      சிறுவர் சிகிச்சை மருத்துவர்,
      மன நோய் வைத்தியர்மற்றும் வைத்தியர்)

| | | |
|---|---|---|
| 3. | வைத்திய அதிகாரிகள் | 20 |
| 4. | பல் சிகிச்சை வைத்தியர்கள் | 01 |
| 5. | பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி | 03 |
| 6. | துணை மருத்துவ ஊழியர்கள் | 13 |
| 7. | பிரதான தாதி | 01 |
| 8. | தாதி உத்தியோகத்தர்கள் | 64 |
| 9. | எழுதுனர்கள் மற்றும் அத்தோடு தொடர்புபட்ட தரம் | 09 |
| 10. | உணவுப் பொறுப்பதிகாரி | 01 |
| 11. | ஆய்வு கூட உதவியாளர் | 01 |
| 12. | மின்சார தொழில் நுட்பவியலாளர்கள் | 01 |
| 13. | சமையற்காரர்கள் | 02 |
| 14. | பராமரிப்பு தொழிலாளிகள் | 03 |
| 15. | சாரதிகள் | 03 |
| 16. | சுகாதார அலுவலக உதவியாளர்கள் | 58 |
| 17. | நாளாந்த சுகாதார அலுவலக உதவியாளர் | 09 |
| | **மொத்தம்** | **195 + 05 வெளி நிபுணர்கள்** |

## B. 2015ஆம் ஆண்டின் உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | வைத்திய உத்தியோகத்தர்கள் | 01 |
| 2. | வைத்திய அதிகாரிகள் | 03 |
| 3. | பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி | 01 |
| 4. | பிரதான தாதி | 01 |
| 5. | பராமரிப்பு அதிகாரி | 07 |
| 6. | சுகாதார முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| 7. | உணவு பொறுப்பதிகாரி | 01 |
| 8. | சுகாதார சேவை உதவியாளர் | 06 |
| | மொத்தம் | 24 |

**C.** <u>இராஜினாமாச் செய்தல் மற்றும் ஓய்வு பெற்றுச் செய்தல் - 2015 ஆம் ஆண்டிற்குள்</u>

<u>இராஜினாமாச் செய்தல்</u>

| தொகுதி | | காரணம் |
|---|---|---|
| பிரதான தாதி | 01 | தனிப்பட்ட காரணம் |

<u>ஓய்வு பெற்றுச் செல்லல்</u>

| தொகுதி | | காரணம் |
|---|---|---|
| பிரதான தாதி | 02 | தனிப்பட்ட காரணம் |

**D.** <u>சேவையை விட்டு விலகுதல்</u>

| தொகுதி | | காரணம் |
|---|---|---|
| பிரதான தாதி | 01 | தனிப்பட்ட காரணம் |
| சுகாதார அலுவலக உதவியாளர் | 02 | தனிப்பட்ட காரணம் |

**<u>சேவையாளர்களுக்கு பயிற்சி அளித்தல்</u>**

- இதய நோய் சிகிச்சைக்காக மாணவர் ஒருவரைத் தெரிவு செய்து சுகாதார அமைச்சில் இதய நோய்ச் சிகிச்சைப் பாடசாலையில் ஒரு வருடப் பயிற்சி 2015 யூன் 08 ஆம் திகதி முதல் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

**<u>மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான விசேட பயிற்சிகள்</u>**

- M.D. (Ophthal.) இன் முதலாம் பகுதி சித்தியடைந்த மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் கண் நோய்கள் பற்றி பட்டப் பின்படிப்பிற்காக பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- ஐக்கிய இராச்சியத்தில் வெளிநாட்டுப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டு M.D. மருத்துவத் துறையில் 2 ஆம் பகுதியினை பூர்த்தி செய்து திரு. (டாக்டர்) ஜி. என். டி. திசாநாயக்க அவர்கள் வைத்திய நிபுணர் பதவிக்கு தகைமை பெற்றுள்ளார்.

# வைத்தியசாலையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றிய பகுப்பாய்வு

## வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றிய சுருக்கம்

நோயாளர்களை பொருத்த வரை,வைத்தியசாலையினால் வழங்கப்படுகின்ற சேவைகள் முக்கியமான பகுதிகள் இரண்டாக வகைப்படுத்த முடியும். அது வெளி நோயாளர் பிரிவு மற்றும் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளர் பிரிவு என்பவனவாகும். (முறையே அடிப்படை சுகாதார சேவைகள் மற்றும் மூன்றாம்நிலைசுகாதார சேவைகள்)

வெளி நோயாளர் பிரிவு மூலம் வெளிப்பறச் சிகிச்சை ,**ETU**சிகிச்சை அலகு மற்றும் கிளினிக்குகள் உள்ளடக்கப்படும்.

தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளர் பிரிவின் மூலம் சிகிச்சை மற்றும் பரிசோதித்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள நோயாளிகளை அனுமதித்தல் இங்கு இடம் பெறுகின்றன.

## சாதாரண நோயாளர்களை அனுமதித்துக் கொள்ளல்

வெளி நோயாளர் பிரிவு ,அவசர சிகிச்சை பிரிவு அல்லது கிளினிக்குகள் மூலம்நேரடியாக நோயாளர்கள் இங்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மருத்துவ பிரச்சினைகள் , சத்திரசிகிச்சை தேவைப்பாடுகள் மற்றும் கண் பிரச்சினைளுடன் கூடிய நோயாளர்களை பொருத்தமான வாட்டுகளுக்குஅனுமதிக்கப்பட்டு அங்கு அவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைஅளிக்கப்படுகிறது. எம்ஆர் ஐ, சீடீ ஸ்கேன் போன்ற விசேட பரிசோதனைகள் தேவைப்படும்நோயாளர்களுக்கு தேவைப்படுமிடத்து அவர்களை தேசிய வைத்தியசாலை , ராகம கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை அல்லது தனியார் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றனர்.

விசேடவைத்திய நிபுணர்கள் மூலம் சிகிச்சை பெற வேண்டியுள்ள நோயாளர்களை தேவையின் நிமித்தம் வேறு வைத்தியசாலைகளுக்கு உரிய விசேட வைத்திய நிபுணர்களிடம் அனுப்பப்படுவர். இந்த வைத்தியசாலையில் இல்லாத மேலதிக சிகிச்சை பெற வேண்டிய தேவைப்பாடுகள் உள்ள தீவிர சிகிச்சைத் தொகுதியில் உள்ளடங்கக் கூடிய நோயாளிகளுக்கு அவ் வசதிகள் அடங்கிய அண்மையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

## வைத்தியப் பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகள்

மூன்றாம் நிலை சிகிச்சைகள் உட்பட தங்கி இருந்து சிகிச்சை பெறும் பொதுவான வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு , அவசர சிகிச்சைப் பிரிவு , கிளினிக்குகள் மற்றும் அனுப்புவதன் ஊடாக விசேடமானவை அல்லாத சாதாரண
நோயாளிகளைஅனுமதித்துக்கொள்வதற்காகபெற்றுக்கொடுக்கப்படும்.


சாதாரணவைத்தியர்குழுவானதுஉரியவசிதிகளுடன்மூலம்அனுப்பப்படுகின்றசிகிச்சையின்பின்னரானநிலையங்களுடன்கூட்டுச்சேர்ந்துநடவடிக்கைகள்எடுக்கப்படும்.

வைத்தியர் பிரிவின் மூலம் வைத்தியசாலையின் ஏனைய விசேடமான அலகுகளுக்கு தேவையான சாதாரண வைத்திய உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

# பிரிவு ரீதியான பகுப்பாய்வு:

## ○ <u>வெளிநோயாளர்பிரிவு</u> →


- ✓ நாளொன்றுக்கு பொதுவாக நோயாளிகள் நோநோ 379 பேபேர் சிகிச்சைக்காக வெளி நோயாளர் பிரிவிற்கு சமுகளிக்கின்றனர்.
- ✓ **2015**ஆம் ஆண்டிற்குள் வெளி நோயாளர் பிரிவிற்கு வருகை தந்துள்ள மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 138,194 ஆவதோடு கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நோயாளர்கள் 1778 இற்கு அதிகமான எண்ணிக்கை சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர்.




- ✓ பிரதான நகரமான கந்தானையில் இருந்து குறண வரையிலும் உட்புறமாக மினுவன்கொட வரையிலும் மற்றும் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலய ஊழியர்களும் விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர் .
- ✓ போதிய அளவான மருத்துவ அலுவலர்கள் இல்லாதிருத்தல் இவ் வருடத்தின் தடைதடை ஒன்றாக இனங் காணப்பட்டுள்ளது.

## ○ <u>அவசரசிகிச்சைப்பிரிவு</u> →


- இருபத்துநான்குமணிநேரம்முழுவதும்சேவைஒன்றுநோயாளிகளுக்குபெற்றுக்கொடுக்கப்படுகின்றது . திடீர்விபத்துக்கள், சத்திரசிகிச்சை, சிகிச்சை, வீதிவிபத்துக்கள், தொழினுட்பவிபத்துக்கள்மற்றும்மனைசார்விபத்துக்கள்உட்படஎந்தவொருசந்தர்ப்பத்திலும்உரியசிகிச்சைகள்அளிக்கப்படுகின்றன.
  கட்டுநாயக்கஏற்றுமதிஊக்குவிப்புவலயத்தில்இடம்பெறுகின்றதொழிற்சாலைதிடீர்விபத்துக்கள்ஏற்படுபவர்களைசிகிச்சைக்காகதிடீர்விபத்துப்பிரிவிற்குகொண்டுவரவேண்டிஉள்ளது .
  கடுமையாகவிபத்துக்குஉள்ளானநிலையினைக்கட்டுப்படுத்திவைத்தியர்களின்சிகிச்சைதேவைப்படுகின்றநோயாளிகளைஉள்ளகமருத்துவர்களினால்சிகிச்சைஅளிக்கப்படும் . சத்திரசிகிச்சை, சிறுவர்நோய்கள்மற்றும்ஏனையமருத்துவசிகிச்சைகளுக்குஉட்படாதநிகழ்வுகளுக்குபாத்திரமானவர்கள்விசேடசிகிச்சைகளுக்காகஅருகிலுள்ளவைத்தியசாலைகளுக்குஅனுப்பப்படுவர் .
  வைத்தியர்கள்போதியளவுஉள்ளமையால்வைத்தியவாட்டுச்சிகிச்சையினைபெற்றுக்கொடுப்பதற்குசிலநாட்களுக்குமுன்புதேவையானநோயாளிகளைமிகவும்பாதுகாப்பானசத்திரசிகிச்சைஇப்பிரிவின்மூலம்வழங்கப்படுகின்றது. உதாரணமாக, இதயநோய்கள், மிகவும்சுவாசிக்கஅவதிப்படுபவர்கள், உயிர்ஆபத்துக்களைஏற்படுத்துகின்றநியூமோனியாநோயாளர்களைவைத்தியசாலையின்உள்ளே H.D.U இல்லாததன்காரணமாகமிகவும்நெருங்கியபாதுகாப்பிற்காக E.T.U வில்வைத்துக்கொள்ளப்படும்.
- 2015 ஆம் ஆண்டிற்குள் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 21,232ஆகும்.




○ **கிளினக்குகள் (மருத்துவசிகிச்சைநிலையம்)** →

- ✓ வைத்திய சிகிச்சை , அறுவை சிகிச்சை , சிறுவர் சிகிச்சை , நீரிழிவு மற்றும் உயர் குரு அழுத்தத்திற்கான சிகிச்சை , கண் சிகிச்சை , உளவியல் நோய்களுக்கான வைத்திய சிகிச்சை, சுவநாரி மற்றும் குடும்பத் திட்ட சிகிச்சைகள் பற் சிகிச்சை மற்றும் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை **(NCD** சிகிச்சை)இடம்பெறுகின்றன.வைத்திய சிகிச்சை , அறுவை சிகிச்சை , சிறுவர் சிகிச்சைமற்றும் கண் சிகிச்சை என்ப விசேட வைத்திய நிபுணர்களின் அவதானிப்பின் கீழ் இடம்பெறுகின்றன. ஏனைய சிகிச்சைகள் சிரேஷ்ட வைத்திய அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- ✓ 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் சகல விதமான கிளினிக்குகளுக்கும் சமுகமளித்த நோயாளர்களின் எண்ணிக்கை 122,935ஆகும்.




○ **<u>பற்சிகிச்சைப்பிரிவு</u>** →


- ✓ பொதுவான பற் கோளாறுகளுக்காக பற் சிகிச்சை ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்றன.

பாடசாலைமாணவர்களுக்கான பற் சிகிச்சை ஒவ்வொரு சனிக்கிழமையும் இடம்பெறுகின்றன.

பில் பிடுங்குதல் , பல் நிரப்புதல் , அகற்றல், Periodontal சிகிச்சை,துளைகள் தொடர்பான சிக்கல்கள், சிறிய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளல் போன்ற அவசரமான பற் சிக்கல்களுக்கு பொதுவான பரிசோதனைகள் இடம்பெறுகின்றன.

இங்கு இடம்பெறுகின்ற முக சத்திர சிகிச்சைகளுக்கிடையே mucosa, பாதிக்கப்பட்ட 3 ஆவது பின் கடைவாய்ப் பற்களை அகற்றல் , பாதிக்கப்பட்ட கோரைப்பற்களை அகற்றல் இடம்பெறுகின்றன.


| சிகிச்சை | சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பல் பிடுங்குதல் | 3,461 |
| பல் நிரப்புதல் | |
| - நிரந்தரமாக நிரப்புதல் | 1,147 |
| - தற்காலிகமாக நிரப்புதல் | 613 |
| பற்களை சுத்தப்படுத்தல் | 184 |
| ஏனையவை | 2,829 |
| **சிகிச்சைகளுக்கு வருகை தந்துள்ள பற் சிக்கலுள்ள நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை** | **8,234** |




- ✓முக அலங்காரத்திற்கான ஒப்பனை கிளினிக்குகளும் இடம்பெறுகின்றன . பற்களை வெண்மையாக்குதல், முன் பக்க பற்களுக்கு பொய்ப் பல் கட்டும் நடவடிக்கை மற்றும் பின் பக்க பற்களுக்குGICகொண்டு அடைத்தல் நடவடிக்கையும் இடம்பெறுகின்றன . முனமுன் பக்கமாக நீண்டிருக்கும் பற்களுக்காக உகந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும் .

## ○ <u>வதிவிடநோயாளர்கள்</u> →


- ✓ 164 படுக்கைகளுடன் 05 வாட்டுகள் உள்ளன. அ த்தோடு 88 படுக்கைகள் (கட்டில்கள்) கண் சிகிச்சைப் பிரிவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
- ✓ 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாக 17,620 நோயாளர்கள் வாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



## ○ மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகள்

- ✓ களனிப் பல்கலைக்கழக மருத்துவ பீட தொழில்சார் பிரிவிலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களின் உதவியுட ன்சாதாரண சத்திரசிகிச்சைகள் (நடுத்தர மற்றும் சிறிய அளவிலான) மேற்கொள்ளப்பட்டன.
- ✓ 2015 ஆம் ஆண்டு க்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளின் (கர்ப்பம் மற்றும் சாதாரண அறுவை சிகிச்சைகள்) மொத்த எண்ணிக்கை 13,677 ஆகும்.
- ✓ சகலவிதமானசத்திரசிகிச்சைகளுக்கும்சாதாரணமானவைத்தியசாலைக்கட்டணம்அறவிடப்பட்டுள்ளது .

குறைந்த வருமானமுடைய நோயாளர்களுக்கு வைத்தியசாலைக் கட்டணத்தை குறைத்துஅறவிடுவதற்கானவசதிகள்செய்து கொடுக்கப்பட்டுள்ளன.




## ○ காயங்கள்சிகிச்சைப்பிரிவு →

கடந்த மூன்று வருடக் காலப் பகுதியில்காயங்கள் சிகிச்சைப் பிரிவின் புள்ளி விபரவியல் பின்வருமாறு :

| வருடம் | நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2012 | 1,162 |
| 2013 | 6,071 |
| 2014 | 14,483 |
| 2015 | 23,114 |

இப் பிரிவினுள்ளே நோயாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளதாக காணப்படுகின்றது . வைத்தியசாலையில் காயங்கள் சிகிச்சைப் பிரிவுமுழு நாட்டிலும் புகழை நிலை நாட்டியுள்ளதோடு தூர வெளிப் பிரதேசங்களிலிருந்து இவ் வைத்தியசாலைக்கு நோயாளிகள் கொண்டுவரப்படுகின்றது .


1. சிகிச்சைக்கு சமுகமளித்த புதிய நோயாளர்களின் எண்ணிக்கை 690
2. சிகிச்சைக்கு சமுகமளித்த நோயாளர்களின் எண்ணிக்கை 23,114
3. சிகிச்சை பெற்று வெளியேறியவர்களின் எண்ணிக்கை 285
4. சாதாரணமாக நாளாந்தம் வருவோர் 74

மயக்க மருந்தின் கீழ் சிறிய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளிகளுக்கு வைத்தியசாலையின் உள்ளே சிகிச்சை அளிப்பதோடுஅறுவை சிகிச்சைக் கூடத்தினுள் தீதீவிர சத்திர சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டிய நோயாளிகளை அருகிலுள்ள கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை , நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலை , கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவதோடு அச் சிகிச்சை முடிந்த உடனே மீண்டும் பிரிவிற்குக் கொண்டுவரப்படும்.

வைத்தியசாலையுடன் தொடர்புடைய வெளிப்புற நிபுணர்கள்அறுவை சிகிச்சை வைத்தியரின் அறுவை சிகிச்சை பற்றிய ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

காயங்களை குணப்படுத்துவதற்கு உரிய ஆளணியினர் பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தாதாதிச் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்திய அலுவலர்கள் தமது பயிற்சியினை இதவ் அலகின் மூலம் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த காயங்கள் சிகிச்சை பிரிவிற்குள் வதிவிட நோயாளிகள்இருக்கின்றமையினால் ஏனைய வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற சிகிச்சைகளை விட வித்தியாசமாக இருக்கும்.





- ✓ 2015ஆம்ஆண்டிற்குள்காயங்கள்சிகிச்சைப்பிரிவில்சிகிச்சைபெற்றுள்ளமொத்தநோயாளிகளின்23,114ஆகும்.

## ○ <u>ஆய்வுகூடச்சோதனைகள்</u> →

அடிப்படை ஆய்வு கூடச் சேவைகள் வழங்கப்படுகின்றன . கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதா ஆய்வு கூடச் சோதனைகள் அடிப்படை ஆய்வு கூடச் சேவைகளுக்குமேலதிகமாக 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.


- ➢ Serum Electrolytes
- ➢ Troponin I
- ➢ C. Reactive Proteins- CRP (போதியளவு)

✓2015 ஆம் ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு கூடச் சோதனைகளின் மொத்த எண்ணிக்கை 57,138ஆகும்.




○ **ஈ.சீ.ஜி.** →

✓ 2015 ஆம் ஆண்டிற்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட E.C.G.களின் எண்ணிக்கை3,014ஆகும்.




○ **ஊடுகதிர்பரிசோதனை(எக்ஸ - ரே) மேற்கொள்ளல்** →

✓ 2015 ஆம் ஆண்டிற்குள் எடுக்கப்பட்டுள்ள எக்ஸ் - ரேக்களின் எண்ணிக்கை **5,505**ஆகும்.



# கண் சிகிச்சைப் பிரிவு

கண் சிகிச்சைப் பிரிவினால் வழங்கப்படுகின்ற சேவைகள்

- நாளாந்த கிளினிக்குகள்
- 24 மணிநேரகாயங்கள்சிகிச்சைசேவை
- கண் நோய்கள் தொடர்பான சோதனைகள்
- கண் சத்திர சிகிச்சைகள்
- லேசர் சிகிச்சைகள்
- வதவிட நோயாளர் முகாமைத்துவம்
- கண் சிகிச்சை முகாம்களை நடாத்துதல்

## கண் சிகிச்சைப் பிரிவின் செயலாற்றுகைச் சுருக்கம்

| செயற்பாடுகள் | **2015**இன் செயலாற்றுகை |
|---|---|
| அனுமதிக்கப்பட்டவர்கள் | 13,632 |
| சத்திரசிகிச்சைகளின்எண்ணிக்கை | 11,341 |
| கிளினிக்குவருகைதந்தநோயாளர்களின்எண்ணிக்கை | 72,559 |
| லேசர்சிகிச்சைபெற்றவர்களின்எண்ணிக்கை | 1,984 |
| மூக்குக்கண்ணாடிசிகிச்சைபெற்றவர்கள் | 15,258 |
| அவசரநோய்களுக்குசிகிச்சைபெற்றவர்களின்எண்ணிக்கை | 2,494 |
| கண்முகாம்களுக்குவருகைதந்தநோயாளர்களின்எண்ணிக்கை | 1,891 |

## கிளினிக்குகள்

- வாரத்தில் ஞாயிறு மற்றும் அரச பொது விடுமுறைகள் தவிர்ந்த ஏனைய அனத்து நாட்களிலும் நடைபெறும்.
- முன் கூட்டிய பதிவுகள் தேவைப்படாததோடு நோயாளிகளுக்கு உடனடியாக வந்து நோயாளிகள் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.
- நோயாளர்களுக்கு எந்தவொரு வரையறையும் கிடையாது..
- கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளினிக்குகள் நடைபெறுகின்றன.
  - ✓ சாதாரண கண் சிகிச்கைள்
  - ✓ நீரிழிவு சிகிச்சை கிளினிக்
  - ✓ குளுக்கோமா நோய் கிளினிக்
  - ✓ சிறுவர் மருந்து கிளினிக் சேவைகள்
  - ✓ சத்திர சிகிச்சையின் பின்னரான கிளினிக்குகள்
  - ✓

## கண் சத்திர சிகிச்சைகள்

இந்தப் பிரிவிற்குள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளுக்கான கண் சத்திர சிகிச்சைகள் இடம்பெறுகின்றன.

i. முன்பக்க பிரிவு சத்திரசிகிச்சைகள்
ii. பின்பக்க பிரிவு சத்திரசிகிச்சைகள்
iii. கண்குழி சம்பந்தமான சத்திரசிகிச்சைகள்
iv. குளுக்கோமா சம்பந்தமான சத்திரசிகிச்சைகள்
v. கண்ணுக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற சத்திர சிகிச்சைகள்

சத்திர சிகிச்சை மேற்கொள்வோர்களின் காத்திருக்கும் பட்டியல் என்பது சிக்கல் ஒன்றல்ல. தேவையான நபர்களுக்கு கிளினிக்குகளுக்கு வருகை தரும் நாளிலேயே சத்திர சிகிச்சையினை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் உள்ளது. உதாரணம்: வெள்ளை தோன்றுவதன் காரணமாக குணப்படுத்தக் கூடிய குருட்டுத் தன்மை.

**மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை**

| சத்திரசிகிச்சைகளின்வகைகள் | நோயாளிகளின்எண்ணிக்கை 2015 |
|---|---|
| முன் பகுதி சத்திர சிகிச்சை | 9,969 |
| நீரிழிவு சத்திர சிகிச்சை | 70 |
| பின் பகுதி தொடர்பான சத்திர சிகிச்சை | 276 |
| வேறு சத்திர சிகிச்சை | 1,026 |
| கிளினிக்கில் மேற்கொள்ளப்படுகின்ற சிறிய சத்திர சிகிச்கைள் | 243 |
| மொத்தம் | **11,584** |

## லேசர் சிகிச்சை

பின்வரும் வகையான அனைத்து லேசர் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

i. YAG capsulotomy
ii. YAG PI
iii. Pan Retinal Laser Photo coagulation(PRP)
iv. Focal லேசர் சிகிச்சை(FLT)
v. Peripheral லேசர்
vi. Grid லேசர்
vii. Barrier லேசர்
viii. Lid லேசர்

லேசர் சிகிச்சை பிரிவின் ஊடாக பாரிய அளவிலான நீரிழிவு மற்றும் குளுக்கோமாநிலைமையினைக்கட்டுப்படுத்துவதற்குஎமக்குமுடியுமாகஉள்ளது.லேசர்சிகிச்சைபெறும்அதிகமானஎண்ணிக்கையானநோயாளிகள்கிளினிக்குக்குவந்ததினமேலேசர்சிகிச்சைவழங்கப்படுகின்றது.

**2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட லேசர் சிகிச்கைளின் மொத்த எண்ணிக்கை**

| லேசர் வகைகள் | மேற்கொள்ளப்பட்ட**எண்ணிக்கை** |
|---|---|
| PRP | 229 |
| FLT | 326 |
| YAG Capsulotomy | 1,307 |
| Yag PI | 53 |
| ஏனையவை | 69 |
| **மொத்தம்** | **1,984** |

## வதிவிட நோயாளர் முகாமைத்துவம்

வாட்டுகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையினை விஞ்சிய சத்திர சிகிச்சைகள் நடைபெற்ற போதிலும் தூரப் பிரதேசங்களில் இருந்து வருகின்ற நோயாளிகளில் அனேகமானநோயாளர்கள் அனுமதிக்கப்படும் அன்றே சத்திர சிகிச்சையை பெற்றுக்கொண்டு அதே நாளிலேயே வீடு செல்கின்றனர். ஆகையால் 88 படுக்கைகளைக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எந்தத் தங்கு தடைகளும் இல்லை.

| | **2015** |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 17,620 |

## கண் பார்வை குறைவு தொடர்பான சேவைகள் - 2015

| | **2015** |
|---|---|
| கண் பார்வை குறைவினை குணப்படுத்திய எண்ணிக்கை | 15,258 |

| | **2015** |
|---|---|
| H.V.F. நோயாளர்கள் | 303 |
| P.M.T. நோயாளர்கள் | 1,107 |
| சத்திர சிகிச்சையின் பின்னரான நோயாளர்கள் | 1,559 |
| OCT | 1,832 |
| மொத்தம் | **4,801** |

## கண் சிகிச்சை முகாம்கள்

நாடு முழுவதிலும் முன்னரே நடாத்தப்படுகின்ற கண் சிகிச்சை முகாம்களில் இனஇனஇனங் காணப்படுகின்ற நோயாளர்கள் சத்திர சிகிச்சை, லேசர் சிகிச்சை மற்றும் வேறு பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைக்காக விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். எமது கிளினிக்குகளின் போதுஅதன் பின்னணியைப் பார்த்து மேற்கொள்ளப்படுகின்றது. (உதாரணம்: குளுக்கோமா)

கண் வில்லைகளை பெற்றுக் கொள்வதற்குமுடியாத நோயாளர்களுக்காக சத்திர சிகிச்சை இலவசமாக செய்து கொடுக்கப்பட்டு பாபல்வேறு கொடையாளிகளிடமிருந்து வைத்தியசாலைக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற வில்லைகள் பொருத்தப்படுகின்றது.

## கண் நோய் சம்பந்தமான பரிசோதனைகள்

கீழே தரப்பட்டுள்ள கண் நோய் சம்பந்தமான பரிசோதனைகள் வைத்தியசாலையின் உள்ளே மேற்கொள்ளப்படுகின்றது.

- Fundus Fluorescein Angiography
- Anterior Segment Photography,
- HVF (Humphrey visual field)பரிசோதனை,
- ஸ்கேன்/ சிவிbiometry,
- Bஸ்கேன்,
- OCT ( Optical Coherence Tomography ) Disc and Macula,
- Corneal Topography,
- Fundal Photography

**<u>கண்ணில் வெள்ளை ஏற்படுவதன் காரணமாக குகுருட்டுத் தன்மையினை அகற்றுவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கை</u>**

நாட்டின் அபிவிருத்தி அடையாத பிரதேசங்களில் பாரிய அளவில் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு சுகசுகாதார அமைச்சின் விசன் 2020 இன்இன் உதவியுடன் இந்த தேசிய நிகழச்சித் திட்டத்திற்கு நாம் பங்களிப்புச் செய்வோம்.

இலவசமாக வில்லைகளைப் பெற்றுக் கொடுத்தல் உட்பட வைத்தியசாலைக் கட்டணம் போன்றன இல்லாமல் குறைந்த வரவரப்பிரசாதங்கள் உள்ள நோயாளர்களுக்கு இலவசமாக சேவையொன்றை வைத்தியசாலை வழங்குகின்றது.

சேவைகள் வழங்கப்பட்டுள்ள பிரதேசங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கஹவத்த | 156 |
| கொலொன்ன | 224 |
| பலாங்கொட | 149 |
| எஹெலியகொட | 243 |
| கலவான | 147 |
| தரணியகல | 65 |
| ரம்புக்கன | 390 |
| சூரியவெவ | 334 |
| திக்ஓயா | 50 |
| நெலுவ | 06 |
| நுவரெலியா | 312 |
| தலவாக்கலை | 39 |
| நீர்கொழும்பு | 35 |
| ராகம | 34 |
| ஆனமடுவ | 40 |
| கொழும்பு | 33 |
| சீதுவமற்றும்அதனைஅண்டியபிரதேசங்கள் | 230 |

**இலவசமாகவில்லைமற்றும் வைத்தியசாலைக்கட்டணங்கள்அறவிடப்படாத மொத்தசந்தர்ப்பங்களின்எண்ணிக்கை** **2,487**

# ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள்

- 2015 ஆம் ஆண்டிற்குள் படுகைகள் பயன்படுத்தப்படும் சதவீதம் **65.65%ஆகும்.**

- 2015 **Morbidity** கீழே காட்டப்பட்டுள்ளது.-

மிகவும் பொதுவாக காணப்படக் கூடிய நோய்களின் நிலைமைகள் வரிசைப்படி கீழே தரப்பட்டுள்ளது.

1. கண்ணில் வெள்ளை தோன்றல் மற்றும் வில்லையில் ஏற்படுகின்ற ஏனைய நோய்கள்
2. கண்ணின் ஏனைய கோளாறுகள் மற்றும்adnexa
3. Diabetes Mellitus
4. வைரஸ் காய்ச்சல் உட்பட வைரஸ் நோய்கள்
5. Bronchial ஆஸ்துமா நோய்
6. Hypertension
7. Gastro enteritis
8. காயங்கள் உட்பட தோல் நோய்கள்
9. மர்ம உறுப்புக்கள் முறைமை தொடர்பான நோய்கள்

➢ **ஆட்கொல்லி நோய்கள்**

1. Septicemia
2. Ischemic இருதய நோய்கள் மற்றும்Myocardial infarction
3. இதய நோய்கள்
4. Pneumonia

➢ **விசேட சந்தர்ப்பங்கள்**

✓ வருடாந்த இரத்த தான முகாம் 2015 பெப்ரவரி 16 ஆம் திகதிநடத்தப்பட்டது.

✓ பிரிவுத் தலைவர்கள் கூட்டம் அவ்வப்போது நடத்தப்பட்டதுடன்மற்றும்நாளாந்த ம் ஏற்படுகின்ற விடயங்கள் கலந்தரையாடப்பட்டது.

✓ தேவை எனக் கருதும்போது அலுவலர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

➢ **சமய அலுவல்கள்**

➢ வெசாக் பன மற்றும் பொசான் அன்னசாலைகள் நடாத்தப்படுவதோடு நத்தார் நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன .

➢ **வேறுவிடயங்கள்**

✓ பாரிய அ ளவிலான மருந்துத் தட்டுப்பா டுகளோ அல்லது நுகர்வோர் பொருட்க ளோ பற்றாக்குறை ஏற்படவில்லை.

✓ ஏதேனும் தொழிற்சங்க நடவடிக்கைகளோ அல்லது ஏதாவது வகையானவேலை நிறுத்தங்களோ இடம்பெற வில்லை

✓ வைத்தியசாலை க்கோ அல்லது அலுவலர்களுக் கோ எதிராகஎந்தவொரு வகையான பாரிய முறைப்பாடுக ளையும் நோயாளர்கள்முன்வைக்கவில்லை.

# 2015ஆம் ஆண்டின் பிரதான நிகழ்வுகள்

2015 ஆம் ஆண்டிற்குள் கீழே காட்டப்பட்ட கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

## A) கொள்வனவு செய்தல்

### 1) மருத்துவ உபகரணங்கள்

மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவு செய்த மொத்தத் தொகை ரூ. 24,583,437/- ஆகும்.

| உபகரணங்கள் | அளவு | தொகை (ரூ.) |
|---|---|---|
| Vitrectomy Machine | 01 | 10,992,856.00 |
| Non Contact Biometry System | 01 | 5,867,000.00 |
| Auto Kerato Refractometer | 01 | 2,375,000.00 |
| AB Scanner with Phacymetry | 01 | 2,550,000.00 |
| சத்திர சிகிச்சைக் கூடத்திற்கான கட்டில்கள் | 02 | 900,000.00 |
| Defibrillators | 02 | 1,178,100.00 |
| WD 6வாட்டுக்காக சத்திர சிகிச்சை உபகரணங்கள் | | 173,072.00 |
| வேறு மருத்துவ உபகரணங்கள் (spinal Board, Pulse Oxymeters වැනි ) | | 547,509.00 |

அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட வைத்திய உபகரணங்களின் பெறுமதி -ரூ. 377,538.98

## 2) தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்

தளபாடங்களுக்காக செலவிடப்பட்ட முழுத் தொகை ரூ. 1,129,811.28ஆக இருந்துள்ளது.

| உபகரணங்கள் | அளவு | தொகை (ரூ.) |
|---|---|---|
| வைத்தியசாலைப் படுக்கைகள் | 20 | 472,860.00 |
| கதிரைகள் (பிளாத்திக்கு, மரம்) | 54 | 169,638.78 |
| மேசைகள் | 15 | 209,462.50 |
| ஒரு பக்க அலுமாரியுடன் கூடிய கட்டில்கள் | 20 | 155,000.00 |
| அலுமாரி (கப்பர்ட்) | 11 | 122,850.00 |

## 3) இயந்திரங்கள் மற்றும் மின் உபகரணங்கள்

இயந்திரங்கள் மற்றும் மின் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1,370,131.48ஆக உள்ளது.

| உபகரணங்கள் | அளவு | தொகை (ரூ.) |
|---|---|---|
| குளிர் சாதனப் பெட்டி | 02 | 56,900.00 |
| வாயு சீராக்கி | 07 | 854,731.22 |
| பிரின்டர்ஸ் | 04 | 157,500.00 |
| கணினி& UPS | 02 | 197,204.00 |
| வேறு (மின் கேத்தல், fan ,drill ) | | 103,796.26 |

அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட மின் உபகரணங்களின் பெறுமதி - ரூ.115,798.00

# B) கட்டிடம் நிர்மாணித்தல்

- 2015 பெப்ரவரி மாதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள புதிய மூன்று மாடிக் கட்டிடம் மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.
- புதிய மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான மொத்தச் செலவு - ரூ. 15,0860,032.02

  (இரசாயன ஆய்வு கூடம் , காயங்கள் சிகிச்சைப் பிரிவு , மருந்து அறை போன்றவற்றிற்கு கட்டிடத்தை விசாலமாக்குதல்)

- மருந்து களஞ்சிய சாலையாகப் பயன்படுத்துவதற்காக கட்டிடத்தின் ஒரு பகுதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- புதிய ஆறாம் வாட்டானது சத்திர சிகிச்சை வாட்டு ஒன்றாகப் பயன்படுத்துவதற்காக புதிய கட்டிடம் ஒன்று கீழ் மாடியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- புதிய கட்டிடத்தில் விசேட சத்திர சிகிச்சை கிளினிக் ஒன்றினை அமைப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைளும் எடுக்கப்பட்டுள்ளன.
- வேறு (இரசாயன ஆய்வு கூடக் கூரை) -ரூ. 84,829.00

## C) களி மண் நிரப்புதல்

வைத்தியசாலையின் பின் பக்கமாக உள்ள சதுப்பு நிலத்தினை ரூ. 5,048,541/- ஐக் கொண்ட செலவொன்றை ஏற்று களி மண்ணைப் பயன்படுத்தி நிரப்பப்பட்டுள்ளது. இவ்வாறு நிரப்பப்பட்ட நிலத்தில் ஆறு மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## D) கண் சிகிச்சைக் கிளினிக்கினை புனரமைப்புச் செய்தல்

கண் சிகிச்சைக் கிளினிக்கினை ரூ. 1,288,000/- ஆன தொகை செலவிடப்பட்டு புனரப்புச் செய்யப்பட்டுள்ளது.

- பிரேத அறை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.
- காயங்கள் சிகிச்சைப் பிரிவினைச் சுற்றியுள்ள பூங்காவினை நோயாளர்களுக்குப் பயன்படுத்தும் நோக்கில் பூங்கா வங்கியினைப் பயன்படுத்தி மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது.
- சுகாதாரக் கல்விப் பிரிவினை நடாத்திக் கொண்டு செல்வதற்காக தாதி உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கப்பட்டுள்ளது.
- வெலிசர காச நோயினைக் கட்டுப்படுத்தும் தொழில் முயற்சியுடன் இணைந்து காச நோய்க்கான சட்ட மாதிரிகளைப் பரீட்சிப்பதற்கு சகல நடவடிக்கைகளுக்கும் ஆயத்தாக உள்ளன.

## Services Rendered January to December 2015 Wijaya Kumaratunga Memorial Hospital

| Service Rendered | | January | February | March | April | May | June | July | August | September | October | November | December | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| OPD | *(No. of Patients)* | 10,056 | 10,111 | 11,504 | 9,701 | 11,687 | 13,964 | 12,616 | 10,975 | 11,082 | 12,884 | 12,083 | 11,531 | **138,194** |
| ETU | *(No. of Patients)* | 1,565 | 1,487 | 1,641 | 1,567 | 1,842 | 2,114 | 2,069 | 1,718 | 1,661 | 1,879 | 1,828 | 1,861 | **21,232** |
| CLINICS | | | | | | | | | | | | | | |
| Eye Clinics I | *(No. of Patients)* | 1,036 | 1,118 | 1,463 | 861 | 1,460 | 1,746 | 1,355 | 1,292 | 1,379 | 1,482 | 1,038 | 1,151 | **15,381** |
| Eye Clinics II | *(No. of Patients)* | 4,453 | 4,722 | 4,417 | 3,216 | 4,744 | 5,917 | 5,285 | 5,040 | 4,978 | 4,624 | 5,126 | 4,656 | **57,178** |
| Dental | *(No. of Treatments)* | 649 | 594 | 756 | 575 | 706 | 763 | 891 | 820 | 618 | 661 | 489 | 712 | **8,234** |
| Medical | *(No. of Patients)* | 2,788 | 2,575 | 2,737 | 2,561 | 2,714 | 2,972 | 3,052 | 3,077 | 2,863 | 3,287 | 3,215 | 2,922 | **34,763** |
| Diabetes/ Hypertension | *(No. of Patients)* | 194 | 201 | 209 | 243 | 207 | 224 | 234 | 205 | 287 | 222 | 161 | 302 | **2,689** |
| Surgical | *( No. of Patients)* | 54 | 46 | 53 | 44 | 52 | 62 | 45 | 71 | 63 | 76 | 87 | 94 | **747** |
| Peadiatric | *(No. of Patients)* | 96 | 95 | 178 | 74 | 117 | 151 | 155 | 87 | 117 | 80 | 86 | 119 | **1,355** |
| Psychiatric | *(No. of Patients)* | 163 | 159 | 209 | 208 | 189 | 187 | 169 | 195 | 185 | 184 | 218 | 186 | **2,252** |
| Family Planing | *(No. of Patients)* | 4 | 5 | 2 | 2 | 5 | 8 | 7 | 2 | 2 | - | - | - | **37** |
| Well Women Clinic | *(No. of Patients)* | 5 | 25 | 23 | 2 | 13 | 3 | 22 | 17 | 6 | - | - | - | **116** |
| Wound Care Unit | *(No. of Patients)* | 1,608 | 1,566 | 1,915 | 1,956 | 2,061 | 2,135 | 2,095 | 1,861 | 1,742 | 2,027 | 1,989 | 2,159 | **23,114** |
| NCD Clinic | *(No. of Patients)* | - | - | - | - | - | - | - | 31 | 40 | 44 | 37 | 31 | **183** |
| In Patients | | | | | | | | | | | | | | **-** |
| Ward 01 | *( No. of Admissions)* | 128 | 120 | 136 | 130 | 156 | 183 | 153 | 127 | 149 | 149 | 130 | 98 | **1,659** |
| Ward 02 | *(No. of Admissions)* | 139 | 121 | 145 | 151 | 196 | 227 | 220 | 157 | 153 | 180 | 187 | 152 | **2,028** |
| Ward 03 | *(No. of Admissions)* | 450 | 454 | 572 | 378 | 471 | 454 | 457 | 460 | 431 | 529 | 566 | 354 | **5,576** |
| Ward 04 | *(No. of Admissions)* | 555 | 649 | 759 | 563 | 685 | 677 | 755 | 653 | 634 | 851 | 744 | 531 | **8,056** |
| Ward 05 | *(No. of Admissions)* | 21 | 15 | 33 | 19 | 35 | 32 | 27 | 25 | 32 | 18 | 17 | 27 | **301** |
| Operations | | | | | | | | | | | | | | |
| Eye Surgeory | *(No. of Surgeories)* | 809 | 901 | 1,110 | 784 | 978 | 942 | 1,030 | 926 | 905 | 1,162 | 1,048 | 746 | **11,341** |
| Minor eye surg (Done in Clinic) | *(No. of Surg.)* | 19 | 23 | 26 | 16 | 19 | 17 | 23 | 20 | 26 | 22 | 20 | 12 | **243** |
| General Surgeory | *(No. of Surgeories)* | 7 | 4 | 6 | 5 | 5 | 10 | 6 | 12 | 11 | 11 | 16 | 16 | **109** |
| Laser Treatment | *(No. of Patients)* | 168 | 192 | 165 | 166 | 159 | 133 | 150 | 159 | 175 | 192 | 162 | 163 | **1,984** |
| Refraction Service | *(No. of Patients)* | 1,642 | 1,528 | 1,591 | 1,035 | 1,229 | 1,271 | 1,141 | 1,372 | 1,336 | 1,200 | 778 | 1,135 | **15,258** |
| Investigation :- HVF | *(No. of Patients)* | 32 | 30 | 24 | 22 | 28 | 39 | 31 | 8 | 20 | 25 | 20 | 24 | **303** |
| OCT | *(No. of Patients)* | 103 | 127 | 143 | 150 | 191 | 202 | 169 | 87 | 187 | 227 | 164 | 82 | **1,832** |
| LAB | *(No. of Tests)* | 4,457 | 4,714 | 5,317 | 3,986 | 4,649 | 5,299 | 5,184 | 5,026 | 4,877 | 4,765 | 4,487 | 4,377 | **57,138** |
| X- Ray | *(No. of X- Rays)* | 423 | 435 | 532 | 378 | 491 | 586 | 492 | 427 | 449 | 455 | 444 | 393 | **5,505** |

## நாளொன்றுக்கு நோயாளர் ஒருவருக்கான அலகுச் செலவுகள்

2015 ஆஆம் ஆண்டில் மொத்தச் செலவினத்தை மொத்த செலவினத்தை மொத்த நோயாளர் தின எண்ணிக்கையால்பிரித்து வெளி நோயாளர் வருகை எண்ணிக்கையை ஆறினால் வகுப்பதால் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வருடத்திற்கானமொத்தசெலவு | = | (ரூ.) 273,524,255.03 |
| மொத்தநோயாளர்தினஎண்ணிக்கை | = | 30,931 |
| மொத்தவெளிநோயாளர்வருகைஎண்ணிக்கை | = | 305,495 |
| 6வெளி நோயாளர்கள்=1உள்ளக நோயாளர் வருகை = | 305,495/ 6 | |
| | = | 50,915 |
| மொத்தநோயாளர்தினஎண்ணிக்கை | = | 30,931 +50,915 |
| | = | 81,846 |
| நாளொன்றுக்கானநோயாளர்ஒருவருக்கானசெலவு | = | 273,524,255.03/81,846 |
| | = | 3,341 |

தலைவர்
விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை
சீதுவ

# விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை – சீதுவ
# 2015 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ரூ. | ரூ. |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 1 | 13,047,074.19 | 2,884,616.87 |
| கிடைக்கப் பெற வேண்டியவைகள் | 2 | 8,965,013.00 | 8,046,476.00 |
| இருப்பு | 3 | 20,464,464.95 | 11,670,827.31 |
| முற்பணக்கொடுப்பனவுகள் | 4 | 319,186.05 | 683,617.85 |
| | | 42,795,738.19 | 23,285,538.03 |
| செயற்பாட்டு மூலதன முன்னேற்றம் | 5 | 180,000.00 | 11,836,109.07 |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| உட்கட்டமைப் வசதிகள்,ஆலை மற்றும் உபகரணங்கள் | 6 | 64,265,561.26 | 56,219,606.03 |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 7 | 171,238,530.78 | 150,477,429.59 |
| | | 235,504,092.04 | 206,697,035.62 |
| **மொத்த சொத்துக்கள்** | | 278,479,830.23 | 241,818,682.72 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கொடுபட வேண்டியவைகள் | 8 | 8,263,979.56 | 4,524,559.76 |
| கடன்பட்டோர்கள் | 9 | 37,424,718.74 | 21,122,172.63 |
| பணிக்கொடை ஒதுக்கீடுகள் | 10 | 30,070,612.79 | 21,420,375.65 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 75,759,311.09 | 47,067,108.04 |
| தேறிய சொத்துக்கள் | | **202,720,519.14** | **194,751,574.68** |

**தேறிய சொத்துக்கள் / ஜ்கன்ஓய**

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 11 | 75,787,890.44 | 75,787,890.44 |
| அரசாங்க மானியம்– மூலதனம் | 12 | 172,698,428.14 | 145,722,742.32 |
| நன்கொடை | 19 | 1,861,114.53 | 1,323,877.55 |
| ஒதுக்கம் – மூலதன வருமானம் | | 2,131,366.30 | 2,131,366.30 |
| திரண்ட மிகை / (குறைவு) | 13 | (49,758,280.27) | (30,214,301.93) |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ சம பங்குகள்** | | **202,720,519,14** | **194,751,574.68** |

இவ் நிதி அறிக்கையினைத் தயார் செய்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக பணிப்பாளர் சபை பொறுப்புக் கூற கட்டுப்பட்டிருப்பதோடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி அறிக்கை பணிப்பாளர் சபை சார்பாக கையொப்பம் இடப்பட்டுள்ளது.

…………………………………….. ……………………………………..

**தலைவர்** **பணிப்பாளர்**

திகதி : திகதி :

…………………………………….. ……………………………………..

**பணிப்பாளர்** **கணக்காளர்**

திகதி : திகதி :

# விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை – சீதுவ

## நிதிச் செயல் நிறைவேற்றுக் கூற்று

**2015டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **வருமானம்** | | **ரூ.** | **ரூ.** |
| அரசாங்க மானியம் (மீண்டெழும்) | | 209,000,000.00 | 180,000,000.00 |
| மூலதன மானியம் கடன் தீர்த்தல் | | 23,024,314.18 | 18,808,340.93 |
| ஏனைய வருமானம் | 14 | 21,476,057.13 | 22,347,130.97 |
| மொத்த வருமானம் | | 253,500,371.31 | 221,155,471.90 |
| **செலவு** | | | |
| சம்பளங்கள் மற்றும் ஊழியர் நலன்கள் | 15 | 148,331,817.76 | 108,795,344.54 |
| விநியோகங்கள் மற்றும் பயன்படுத்துபவை | 16 | 70,331,120.86 | 57,765,837.71 |
| தேய்மானம் மற்றும் பராமரிப்புச் செலவு | 17 | 23,102,512.73 | 18,929,389.87 |
| ஏனைய செலவுகள் | 18 | 31,758,803.68 | 32,106,881.68 |
| மொத்தச் செலவுகள் | | 273,524,255.03 | 217,597,453.80 |
| **மிகை/ (குறைவு) உரிய காலத்தில்** | | **(20,023,883.72)** | **3,558,018.10** |

# விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை – சீதுவ

## காசுப் பாய்ச்சல் கூற்று - 2015டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

**செயற்பாட்டு நடவடிக்கைகளில் காசுப் பாய்ச்சல்கள்**

| | |
|---|---|
| மிகை / (குறைவு) | (20,023,883.72) |
| **காசு சாராத வழிகள்** | |
| தேய்மானம் | 23,102,512.73 |
| கடன் தீர்த்தல் –அரசாங்க மானியம் | (23,024,214.18) |
| அதிகரிப்பு – கொடுக்கவேண்டியவைகள் | 3,739,419.80 |
| அதிகரிப்பு - கடன்பட்டோர் | 16,302,546.11 |
| அதிகரிப்பு - இருப்பு | (8,793,637.64) |
| அதிகரிப்பு–ஊழியர் கிரயத்திற்கான மானியம் | 4,378,954.78 |
| அதிகரிப்பு–முற்பணக் கொடுப்பனவுகள் | 364,431.80 |
| அதிகரிப்பு - கிடைக்கவேண்டியவைகள் | (918,537.00) |
| குறைவு–கடந்தவருடசெம்மையாக்கல்கள் | (193,945.89) |
| ஓய்வூதியப் பணிக் கொடை ஏற்பாடு – செலுத்திய | (124,995.00) |
| **தேறிய காசுப் பாய்ச்சல்–செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம்** | **(5,191,348.21)** |

**முதலீட்டுச் செயற்பாடுகளில் காசுப் பாய்ச்சல்**

| | |
|---|---|
| பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | (22,990,085.40) |
| செயற்பாட்டு மூலதன முன்னேற்றம் | (11,656,109.07) |
| மூலதன மானியம் | 50,000,000.00 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் தேறிய காசுப் பாய்ச்சல்** | **15,353,805.53** |

**காசுப் பாய்ச்சல் – நிதிச் செயற்பாடுகளின் மூலம்**

**தேறிய காசுப் பாய்ச்சல்– நிதிச் செயற்பாடுகள்**

| | |
|---|---|
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையும்– தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | **10,162,457.32** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையும் - வருட ஆரம்பத்தில்** | **2,884,616.87** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையும்– வருட இறுதியில்** | **13,047,074.19** |

காசுப் பாய்ச்சல் குறிப்பு 1

காசு மற்றும் காசுக்கு சமமானவையும்

| | 2015 |
|---|---|
| வங்கியிலுள்ள காசு | 13,027,099.19 |
| சில்லறைக் காசு | |
| கையிலுள்ள காசு | 19,975.00 |
| | **13,047,074.19** |

# விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை – சீதுவ

## 2015டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிலையான சொத்துக்கள் அட்டவணை

| விடயம் | கிரயம் | | | | வீதம் | தேய்மானம் | | | | 31/12/2015 ஆம் திகதிக்குளழு தப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1/1/2015ஆம் திகதியில் உள்ளவாறு | வருடத்தில் சேர்க்கப்பட்டவை | வருடத்தில் அகற்றப்பட்டவை | 31/12/2015 දිනට | | 1/1/2015ஆம் திகதியில் உள்ளவாறு | வருடத்தில் சேர்க்கப்பட்டவை | வருடத்தில் அகற்றப்பட்டவை | 31/12/2015 ஆம் திகதிக்கு | |
| காணி | 18,627,500.00 | 6,352,541.00 | | 24,980,041.00 | | - | - | - | - | 24,980,041.00 |
| கட்டிடமும் பொருத்துகளும் | 157,958,510.24 | 17,926,255.50 | | 175,884,765.74 | 2% | 26,108,580.65 | 3,517,695.31 | | 29,626,275.96 | 146,258,489.78 |
| வாகனங்கள் | 17,958,792.90 | | | 17,958,792.90 | 20% | 11,630,789.90 | 3,005,999.00 | | 14,636,788.90 | 3,322,004.00 |
| தளபாடம், பொருத்துகள் மற்றும் உபகரணங்கள் | 8,831,591.97 | 1,171,311.08 | | 10,002,903.05 | 10% | 6,922,596.82 | 528,146.66 | | 7,450,743.48 | 2,552,159.57 |
| இயந்திராதிகள் | 6,647,424.28 | 1,301,280.48 | | 7,948,704.76 | 15% | 5,218,660.16 | 595,892.00 | | 5,814,552.16 | 2,134,152.60 |
| கணனி | 595,182.00 | 197,204.00 | | 792,386.00 | 20% | 416,211.40 | 104,467.20 | | 520,678.60 | 271,707.40 |
| மருத்துவ உபகரணங்கள் | 139,777,047.30 | 24,960,977.09 | | 164,738,024.39 | 15% | 93,402,174.14 | 15,350,312.56 | | 108,752,486.70 | 55,985,537.69 |
| | 350,396,048.69 | 51,909,569.15 | | 402,305,617.84 | | 143,699,013.07 | 23,102,512.73 | 0.00 | 166,801,525.80 | 235,504,092.04 |

**235,504,092.04**

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | 1 | | |
| வங்கியிலுள்ள காசு | | 13,027,099.19 | 2,852,116.87 |
| சில்லறைக் காசு | | | 25,000.00 |
| கையிலுள்ள காசு | | 19,975.00 | 7,500.00 |
| | | 13,047,074.19 | 2,884,616.87 |
| **பெறப்பட வேண்டியவைகள்** | 2 | | |
| வைப்புக் கணக்கு | | 570,000.00 | 50,000.00 |
| விழா முற்பணம் | | 270,000.00 | 225,500.00 |
| விசேட முற்பணம் | | - | - |
| இடர் கடன் | | 8,125,013.00 | 7,770,976.00 |
| | | 8,965,013.00 | 8,046,476.00 |
| **கையிருப்புகள்** | 3 | | |
| காகிதாதிகள் | | 154,042.22 | 140,500.79 |
| மருந்துகள் | | 18,642,050.23 | 10,218,755.29 |
| ஆய்வு கூட இரசாயனப் பொருட்கள் | | 579,056.78 | 645,855.89 |
| துணி வகைகள் | | 109,037.07 | 141,945.07 |
| பொதுக் கையிருப்புப் பொருட்கள் | | 223,272.33 | 295,094.54 |
| பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | | 65,316.18 | 124,674.10 |
| எக்ஸ் - ரே | | 691,690.14 | 104,001.63 |
| | | 20,464,464.95 | 11,670,827.31 |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **முற் கொடுப்பனவுகள்** | **4** | | |
| காப்புறுதி காசு மற்றும் இடைப்போக்கில் உள்ளவையும் | | - | 6,095.40 |
| காப்புறுதி - டபிள் கெப்- GD 2714 | | - | 3,147.97 |
| காப்புறுதி - டபிள் கெப்- PC 4087 | | - | 50,534.92 |
| காப்புறுதி - அம்பியூலன்ஸ்HN - 6312 | | - | 36,627.21 |
| காப்புறுதி - அம்பியூலன்ஸ்LW - 0961 | | - | 18,621.77 |
| சேவை ஒப்பந்தம் - டிஜிற்றல் பிரதி எடுக்கும் இயந்திரம் | | - | 10,710.78 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் GD 2714 | | - | 8,580.78 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் PC 4087 | | - | 4,980.42 |
| சொகுசு வரி PC 4087 | | - | 5,000.00 |
| சேவை ஒப்பந்தம் - பிரிஜ்A/C | | 102,890.16 | 104,865.90 |
| சேவை ஒப்பந்தம் - மீன் தூக்கி | | 152,500.00 | 135,164.70 |
| சேவை ஒப்பந்தம் - விசுவல் ஃபீல்ட் | | 59,725.41 | 29,288.00 |
| கூலி | | - | 270,000.00 |
| மின்சாரம்NO | | | |
| உத்தியோகபூர்வ விடுதி | | 4,070.48 | |
| | | 319,186.05 | 683,617.85 |

| | | | |
|---|---|---|---|
| **மூலதன முன்னேற்றம்** | **5** | | |
| நிர்மாண முன்னேற்றம்–புதிய கட்டிடம் | | - | 10,094,590.07 |
| நிர்மாண முன்னேற்றம் - வாகன தரிப்பிடம்II | | - | 437,519.00 |
| நிர்மாண முன்னேற்றம்–மண் நிரப்புதல் | | - | 1,304,000.00 |
| நிர்மாண முன்னேற்றம்–புதிய அலுவலகம் | | 180,000.00 | |
| | | 180,000.00 | 11,836,109.07 |

| | | | |
|---|---|---|---|
| **உட்கட்டமைப்பு வசதிகள்,இயந்திரம் மற்றும் உபகரணங்கள்** | **6** | | |
| இயந்திரத் தொகுதி | | 2,134,152.60 | 1,428,764.12 |
| தளபாடங்கள் | | 2,552,159.57 | 1,908,995.15 |
| வாகனம் | | 3,322,004.00 | 6,328,003.00 |
| கணனி | | 271,707.40 | 178,970.60 |
| மருத்துவ உபகரணங்கள் | | 55,985,537.69 | 46,374,873.16 |
| | | 64,265,561.26 | 56,219,606.03 |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **காணி மற்றும் கட்டிடங்கள்** | **7** | | |
| காணி | | 24,980,041.00 | 18,627,500.00 |
| கட்டிடம் மற்றும் பொருத்திகள் | | 146,258,489.78 | 131,849,929.59 |
| | | 171,238,530.78 | 150,477,429.59 |
| **திரண்ட செலவுகள்** | **8** | | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | 1,450,000.00 | 1,050,000.00 |
| TEC உறுப்பினர் கட்டணங்கள் | | | - |
| மின்சாரம் | | 592,359.71 | 604,595.66 |
| தொலைபேசிக் கட்டணம் | | 20,916.73 | 41,450.41 |
| எரிபொருள் | | 69,350.00 | 61,269.79 |
| பிரயாணச் செலவுகள் | | 5,018.00 | 2,450.00 |
| மருந்து இருப்புக்கள்ஔෂධ තොග | | 93,965.00 | 15,363.70 |
| மருத்துவ உபகரணங்கள் | | 197,573.00 | - |
| Rep. மருத்துவ உபகரணங்கள் | | 632,522.40 | - |
| Con. மருத்துவ உபகரணங்கள் | | 723,410.00 | - |
| ஆய்வு கூட இரசாயனப் பொருட்கள் | | 675,123.56 | - |
| பொறித் தொகுதி பழுது பார்த்தல் | | 24,500.00 | - |
| விளம்பர அறிவித்தல் | | 86,025.00 | - |
| Con. சாதாரண மருந்துக் களஞ்சியம் | | 42,180.00 | - |
| நீர் | | 1,620.60 | - |
| **செலுத்த வேண்டியவை** | | | |
| திரும்பச் செலுத்தப்படவேண்டிய கேள்பவிப் பண வைப்புகள் | | 170,000.00 | 258,000.00 |
| பிடித்து வைக்கப்பட்ட பணம் | | 975,452.84 | 297,395.00 |
| கொடுப்பனவுகள் – வெளிப்புற வைத்தியர்கள் | | 47,000.00 | 95,000.00 |
| சேவைக் காலப் பயிற்சிக் கொடுப்பனவு – அலுவலக ஆளணி | | - | 64,000.00 |
| - Pupil NO | | 629,676.82 | 470,222.40 |
| - Pupil Para | | 159,896.78 | 97,401.60 |
| உப தொழிலாளர் ஊதியம் | | 242,477.93 | 336,446.20 |
| மேலதிக நேர, மேலதிக வரி மற்றும் { PH கொடுப்பனவு | | 1,419,427.19 | 1,122,439.00 |
| நலன்புரிச் சங்கம் | | 5,484.00 | 8,526.00 |
| | | **8,263,979.56** | **4,524,559.76** |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **கடன் கொடுத்தோர்** | **9** | | |
| SPC | | 20,407,150.70 | 13,479,444.20 |
| MSD | | 8,338,325.90 | 2,828,991.97 |
| சுப்பர் வில்சைன் லிமிட்டெட் | | 5,634,506.16 | 2,748,459.41 |
| | | 293,173.20 | 293,173.20 |
| ப்ரிஜி இஞ்சினியரிங் | | 335,536.72 | 664,919.33 |
| எரண்டி சப்பிளையர் | | 1,800,080.68 | 1,047,184.52 |
| நலின் துசாரா | | - | 60,000.00 |
| வீரமுன்ட | | 165,000.00 | |
| STC | | 139,018.38 | |
| சரத் ஹார்ட்வெயார் | | 69,947.00 | |
| NERD | | 241,980.00 | |
| | | 37,424,718.74 | 21,122,172.63 |
| | | | |
| **ஒதுக்கம்** | **10** | | |
| பணிக்கொடை ஏற்பாடு | | 30,070,612.79 | 21,420,375.65 |
| | | 30,070,612.79 | 21,420,375.65 |
| | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கம்** | **11** | | |
| விஜய குமாரதுங்க ஞாபகார்த்த மன்றம் | | 29,632,139.32 | 29,632,139.32 |
| முதலீட்டு சபை | | 28,155,751.12 | 28,155,751.12 |
| நகர அபிவிருத்தி சபை | | 18,000,000.00 | 18,000,000.00 |
| | | 75,787,890.44 | 75,787,890.44 |

**அரசாங்க மானியம் – மூலதனம்** **12**

| | 1/1/2015ஆம் திகதிக்கு | வருடத்தில் சேர்க்கப்பட்டவை | அழிக்கப்பட்டவை | 31/12/2015 ஆம் திகதிக்கு |
|---|---|---|---|---|
| அரசாங்க மானியம் – மூலதனம் | 138,054,742.32 | 50,000,000.00 | 20,468,314.18 | 167,586,428.14 |
| வாகனம் – டபள் கெப் WPPC - 4087 திறைசேரி மூலம் | 3,360,000.00 | | 1,120,000.00 | 2240,000.00 |
| அம்பியூலன்ஸ்- WPLW - 0961 சுகாதார அமைச்சின் மூலம் | 4,308,000.00 | | 1,436,000.00 | 2,872,000.00 |
| | 145,722,742.32 | 50,000,000.00 | 23,024,314.18 | **172,698,428.14** |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **கடின பற்றாக்குறை** | **13** | | |
| B/F மீதி - 01.01.2013ஆம் திகதிக்கு | | (30,214,301.93) | (33,293,533.83) |
| கால எல்லைக்குள் மேலதிகம் | | (20,023,883.72) | 3,558,018.10 |
| செம்மையாக்கல்கள் | | 479,905.38 | (478,786.20) |
| | | (49,758,280.27) | (30,214,301.93) |

| | | | |
|---|---|---|---|
| **பிற வருமானங்கள்** | **14** | | |
| தனியார் மருத்துவ சான்றிதழ் கட்டணங்கள் | | 226,850.00 | 192,550.00 |
| சில்லறை வருமானப் | | 170,075.00 | 103,684.00 |
| கேட்பு பண வைப்புகள்- மீளளிக்கப்படாதவை | | 154,500.00 | 131,000.00 |
| இடர் கடன் வட்டி | | 350,790.53 | 329,768.51 |
| கண் சத்திரசிகிச்சை கட்டணங்கள் - மானியம் | | 17,366,000.00 | 19,065,500.00 |
| கண் சத்திரசிகிச்சை கட்டணங்கள் - சிறிய | | 191,500.00 | 212,000.00 |
| பொது சத்திரசிகிச்சைகள் - மானியம் | | 16,000.00 | 40,000.00 |
| பொது சத்திரசிகிச்சைகள் - சிறிய | | 95,000.00 | 80,000.00 |
| வட்டி – விஷேட முற்பணம் | | 14,491.60 | 7,678.46 |
| கூலி | | | |
| FFA | | 16,000.00 | 45,500.00 |
| FLT | | 127,500.00 | 132,500.00 |
| மாகாண | | 32,000.00 | 74,000.00 |
| Lid | | 2,000.00 | 10,000.00 |
| Yag PI | | 45,400.00 | 57,400.00 |
| PRP | | 129,150.00 | 144,200.00 |
| HVF | | 135,750.00 | 181,750.00 |
| Yag Capsulomy | | 784,700.00 | 765,100.00 |
| OCT | | 1,591,000.00 | 771,000.00 |
| Grid | | 19,000.00 | 3,500.00 |
| உணவு | | 8,350.00 | |
| | | 21,476,057.13 | 22,347,130.97 |

| | | 2015 | 2014 |
|---|---|---|---|
| **செலவுகள்** | **15** | | |
| ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள் | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு | | | |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு – வைத்திய அலுவலர் | | 30,330,403.56 | 25,367,457.37 |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு -பிற | | 6,030,249.59 | 4,440,624.78 |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு – துணை | | 9,297,197.74 | 6,657,336.82 |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு - NO | | 38,118,956.02 | 27,749,472.88 |
| சம்பளம் மற்றும் கொடுப்பனவு – சிற்றூழியர் | | 32,514,885.53 | 22,035,565.54 |
| E.P.F. 12% | | 7,437,138.06 | 4,952,295.48 |
| E.T.F. 3% | | 1,858,349.39 | 1,238,073.89 |
| மே. நே. - பிற | | 393,756.02 | 368,162.00 |
| மே. நே. –துணை மருத்துவர் | | 521,898.95 | 468,571.00 |
| மே. நே. - தாதியர் | | 6,128,274.19 | 5,403,291.00 |
| மே. நே. - சிற்றூழியர் | | 3,687,748.32 | 3,312,551.00 |
| மேலதிகக் கட்டணம் செலுத்துதல் (M/O) | | 3,487,718.25 | 2,422,988.00 |
| பணிக் கொடைச் செலவு | | 8,525,242.14 | 4,378,954.78 |
| | | 148,331,817.76 | 108,795,344.54 |

<u>வழங்கல்கள்</u>

| | ஆரம்ப இருப்பு 01.01.2015ஆம் திகதிக்கு | 2015 கொள்வனவு செய்தல் | ஆண்டின் நுகர்வு | இறுதி இருப்பு 31.12.2015ஆம் திகதிக்கு |
|---|---|---|---|---|
| ஆய்வு கூட இரசாயனப் பொருட்கள் | 645,855.89 | 1,588,484.06 | 579,056.78 | 1,655,283.17 |
| ஊடுகதிர் படச்சுருளும் இரசாயனமும் | 104,001.63 | 1,155,159.00 | 691,690.14 | 567,470.49 |
| மருந்துகள் | 10,218,755.29 | 70,925,900.77 | 18,642,050.23 | 62,502,605.83 |
| துணி வகைகள் | 141,945.00 | 89,570.00 | 109,037.07 | 122,478.00 |
| நுகர்வுப் பொருட்களும் பொது களஞ்சியமும் | 271,894.54 | 917,650.26 | 223,272.33 | 966,272.47 |
| காகிதாதிகள் | 140,500.79 | 492,423.61 | 154,042.22 | 478,882.18 |
| பழுது பார்த்தல் பராமரிப்பு(ii) | 124,674.10 | 378,042.80 | 65,316.18 | 437,400.72 |
| பல் நுகர்விற்கு எடுக்கக் கூடியன | | 234,140.00 | | 234,140.00 |
| ஈடுபடுத்திய மருத்துவ உபகரணங்கள் | | 2,086,360.00 | | 2,086,360.00 |
| சீருடைகள் | | 912,624.00 | | 912,624.00 |
| வாயு | | 367,604.00 | | 367,604.00 |
| | 11,647,627.31 | 79,147,958.50 | 20,464,464.95 | **70,331,120.86** |

| | 2015 | 2014 |
|---|---|---|
| සැපයුම් භාවිතාව **16** | | |
| ஆய்வு கூட இரசாயனப் | | |
| பொருட்கள் | 1,655,283.17 | 953,904.61 |
| ஊடுகதிர் படச்சுருளும் இரசாயனமும் | 567,470.49 | 226,546.61 |
| மருந்துகள் | 62,502,605.83 | 50,232,435.76 |
| துணி வகைகள் | 122,478.00 | 309,254.74 |
| நுகர்வுப் பொருட்களும் பொது களஞ்சியமும் | 966,272.47 | 590,193.90 |
| காகிதாதிகள் | 478,882.18 | 481,624.11 |
| பழுது பார்த்தல் பராமரிப்பு(ii) | 437,400.72 | 564,802.74 |
| பல் நுகர்விற்கு எடுக்கக் கூடியன | 234,140.00 | 194,910.00 |
| ஈடுபடுத்திய மருத்துவ உபகரணங்கள் | 2,086,360.00 | 2,585,141.24 |
| சீருடைகள் | 912,624.00 | 1,015,663.00 |
| வாயு | 367,604.00 | 611,361.00 |
| | 70,331,120.86 | 57,765,837.71 |
| தேய்மானம் **17** | | |
| கட்டிடங்கள் மற்றும் பொருத்துகள் | 3,517,695.31 | 3,159,170.20 |
| வாகனம் | 3,005,999.00 | 3,006,000.00 |
| தளபாடம், பொருத்துகள்&உபகரணம் | 528,146.66 | 522,580.70 |
| இயந்திரத் தொகுதி | 595,892.00 | 403,363.07 |
| கணனி | 104,467.20 | 78,978.40 |
| மருத்துவ உபகரணம் | 15,350,312.56 | 11,759,297.50 |
| | 23,102,512.73 | 18,929,389.87 |

| | 18 | 2015 | 2014 |
|---|---|---|---|
| **பிரயாணச் செலவுகள்** | | | |
| பிரயாணம் மற்றும் படிக் கொடுப்பனவு (ஏனைய அலுவலர்கள்) | | 26,856.75 | 75,105.00 |
| **பராமரிப்பு** | | | |
| மின்சாரம் | | 7,291,547.98 | 8,764,622.71 |
| நீர் | | 1,657,634.82 | 1,644,721.57 |
| தொலைபேசி | | 297,313.28 | 502,447.47 |
| தபால் | | 17,373.00 | 19,515.00 |
| **பழுது பார்த்தல்&பராமரிப்பு** | | | |
| பழுது பார்த்தல்&பராமரிப்பு - கட்டிடம் | | 153,888.66 | 161,292.85 |
| பழுது பார்த்தல் &பராமரிப்பு- இயந்திரத் தொகுதி | | 1,227,087.62 | 1,138,046.14 |
| பழுது பார்த்தல் &பராமரிப்பு- வாகனம் | | 598,001.45 | 508,656.58 |
| பழுது பார்த்தல் &பராமரிப்பு- கணனி | | 223,300.00 | 4,750.00 |
| பழுது பார்த்தல் &பராமரிப்பு- மருத்துவ உபகரணங்கள் | | 1,707,003.99 | 1,487,215.00 |
| பழுது பார்த்தல் &பராமரிப்பு- தளபாடம் | | 12,000.00 | |
| **ஒப்பந்த சேவைகள்** | | | |
| துப்புரவு செய்தல் | | 5,634,506.16 | 4,769,338.95 |
| சலவை செய்தல் | | 660,000.00 | 720,000.00 |
| பாதுகாப்பு | | 3,371,628.55 | 3,480,334.80 |
| உணவு வழங்கல் | | 5,183,876.85 | 5,863,874.48 |
| **ஏனையவை** | | | |
| நிருவாக சபை உறுப்பினர் கட்டணங்கள் | | 63,000.00 | 48,500.00 |
| சில்லறைச் செலவுகள் | | 817,229.57 | 350,423.70 |
| விளம்பர அறிவித்தல்கள் | | 731,323.50 | 641,312.00 |
| காப்புறுதிக் காசு &இடைப் போக்கு | | 6,095.40 | 11,709.30 |
| ஏனைய வங்கிக் கட்டணங்கள் | | 31,573.00 | 55,052.00 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | 400,000.00 | 400,000.00 |
| சட்டக் கட்டணங்கள் | | | 3,850.00 |
| கூலி | | 318,153.31 | 224,726.95 |
| ஜெனரேட்டர் இயந்திர எரிபொருள் | | 114,800.00 | |
| **வாகனச் செலவுகள்** | | | |
| எரிபொருள் | | 778,675.00 | 937,228.79 |
| காப்புறுதி | | 404,373.59 | 254,096.96 |
| பதிவு. / அனுமதிப் பத்திரக் கட்டணம் | | 31,561.20 | 40,061.43 |
| | | 31,758,803.68 | 32,106,881.68 |

<u>நன்கொடைக் கணக்கு</u>

| | | | |
|---|---|---|---|
| B/F மீதி | 19 | 1,323,877.55 | 461,894.60 |
| நன்கொடைகள் | | 537,236.98 | 861,982.95 |
| | | 1,861,114.53 | 1,323,877.55 |

# விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை – சீதுவ

## தேறிய சொத்துக்கள் / சம பங்குகள்மாறுபடுகின்ற கூற்று

### 2015டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | திறைசேரி மானியம் | அரச மானியம் – மூலதனம் | வேறு நன்கொடை | விகுஅரோ மன்றம் | முதலீட்டுச் சபை | UDA மூலதனம் | இருப்பு - இலாபம் | தேறிய மிகை/ (குறைவு) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2014.12.31 ஆம் திகதிக்கு மீதி | 7,668,000 | 138,054,742 | 1,323,878 | 29,632,139 | 28,155,751 | 18,000,000 | 2,131,366 | (30,214,302) | 194,751,574 |
| ஆண்டின் நன்கொடை | | | 537,236 | | | | | | 537,236 |
| மூலதன மானியம் (வருடத்திற்குள்) | | 50,000,000 | | | | | | | 50,000,000 |
| மூலதன மானியம் ஊதியம் | (2,556,000) | (20,468,314) | | | | | | | (23,024,314) |
| தேறிய மேலதிகம்/ (பற்றாக்குறை) (காலத்தினுள்) | | | | | | | | (20,023,884) | (20,023,884) |
| ஆண்டிற்கான செம்மையாக்கல்கள் | | | | | | | | 479,905 | 479,905 |
| 2015.12.15ஆம் திகதிக்கு மீதி | 5,112,000 | 167,586,428 | 1,861,114 | 29,632,139 | 28,155,751 | 18,000,000 | 2,131,366 | (49,758,280) | 202,720,517 |

## கடந்த ஐந்து வருடங்களில் நிதி சார் செயலாற்றுகை போக்கு

| தொடர் இல. | விபரம் | 2011(000) | 2012(000) | 2013(000) | 2014(000) | 2015(000) |
|---|---|---|---|---|---|---|
| 01 | வருட முடிவில் உள்ளபடி மொத்த நடைமுறையல்லாச் சொத்துகள்(WDV) | 184,632 | 195,703 | 201,770 | 206,697 | 235,504 |
| 02 | வருட முடிவில் உள்ளபடி மொத்த நடைமுறைச் சொத்துகள் | 19,729 | 17,254 | 26,980 | 23,285 | 42,795 |
| 03 | வருட முடிவில் உள்ளபடி திரண்ட நிதி | 204,361 | 212,958 | 230,993 | 241,818 | 278,479 |
| 04 | வருட முடிவில் உள்ளபடி மொத்த நடைமுறை யல்லாப் பொறுப்புகள் | 115,044 | 109,226 | 120,187 | 138,054 | 167,586 |
| 05 | வருட முடிவில் உள்ளபடி மொத்த நடைமுறைப் பொறுப்புகள் | 26,450 | 32,412 | 54,374 | 47,067 | 75,759 |
| 06 | வருடத்திற்கான மொத்த வருமானம் | 132,355 | 154,433 | 152,873 | 221,155 | 253,500 |
| | அரசாங்க மானியம் - மீண்டெழும் | 109,933 | 128,070 | 120,250 | 180,000 | 209,000 |
| | மூலதன நன்கொடை | 19,000 | 10,000 | 191,200 | 33,000 | 50,000 |
| | சொந்த வருமானம் | 22,362 | 26,363 | 32,623 | 22,347 | 21,476 |
| 07 | வருடத்திற்திற்கான மிகை/ பற்றாக்குறை | (3,944) | 3,646 | (20,378) | 3,558 | (20,023) |
| 08 | வருடத்திற்திற்கான மொத்த மூலதனக் கிரயம் | 25,921 | 21,744 | 24,745 | 23,863 | 51,909 |
| 09 | வருடத்திற்திற்கான மொத்த சேவைக் கிரயம் | 68,696 | 77,193 | 90,863 | 108,795 | 148,331 |
| 10 | வருட முடிவில் உள்ளபடி ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை | 144 | 145 | 163 | 183 | 195 |
| | **பங்கீடு** | | | | | |
| (A) | மொத்த வருமானத்தில் நிறுவன வருமானம் | 17% | 17% | 21% | 10% | 8% |
| (B) | ஊழியர் ஒருவருக்கான மொத்த சேவைக் கிரயம் | 477.00 | 532.00 | 557.00 | 594.00 | 760.00 |

## செயலாற்றுகைகாட்டிகள்

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| நோயாளர்எண்ணிக்கை - சேவைகள் | | | | | |
| வெளிநோயாளர் | 265,864 | 259,994 | 266,342 | 277,414 | 305,495 |
| வதிவிடநோயாளர் | 12,372 | 14,079 | 15,963 | 17,378 | 17,620 |
| நாளொன்றுக்குநோயாளருக்கானசெலவு | 2,032 | 2,133 | 2,303 | 2,823 | 3,341 |

எனது இல. My No. எச்எஸ்எம்/பீ/டபிள்யூகேஎம்எச்/1/15/16 உமது இல. Your No. திகதி Date 2016 நவம்பர் 15

தலைவர்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை

**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை அதிகாரச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2016 ஒக்டோபர் 04 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம், கொடுக்கல் வாங்கல் ஒன்று சம்பந்தமாகக் கடைப்பிடிக்க வேண்டிய நிச்சயமானதொரு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் ஒன்று இல்லாதவிடத்து முகாமைத்துவம் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையை உருவாக்கி அதனைப் பயன்படுத்தலாமெனினும், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 1,861,115 பெறுமதியான மூலதனச் சொத்துக்கள் காலக் கழிவு செய்யப்படுவது சம்பந்தமாக அவ்வாறானதொரு கொள்கை அறிமுகஞ் செய்யப்படவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்கள் சம்பந்தமாக அவற்றின் பயன்தரு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 74,243,264 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியபோதும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய ஏற்பட்ட

மதிப்பிடப்பட்ட தவறை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், தற்காலிகமாகச் செயலற்றிருந்ததும் பயன்படுத்தப்படாதிருப்பதுமானதும் ஒதுக்கி வைக்கப்பட வேண்டியதுமான சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றை இனங்காண்பதற்கும் நியாயமான பெறுமதியை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 9 இன் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,464,465 பெறுமதியுடைய கையிருப்பைப் பெறுமதியிடல் சம்பந்தமாகப் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கையும் பயன்படுத்த கிரயச் சூத்திரமும் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதனத் தன்மை வாய்ந்த செலவினமாகிய வைத்தியசாலைப் பதவியணியினரின் சம்பளத் தயாரிப்பிற்கு ரூபா 200,000 செலவிட்டு மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த மென் பொருளின் (Payroll System) பெறுமதி மூலதனமாக்கப்படாது இலாபத்திற்கெதிரே பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு ஊழியர் பணிக்கொடைக்கென ரூபா 12,850,104 நிதியேற்பாடு கூடுதலாகக் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும்போது மீளாய்வாண்டிற்கான ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடாகிய ரூபா 8,525,242 சீராக்கல் செய்யப்படாது முன்னைய ஆண்டின் நிதியேற்பாடாகிய ரூபா 4,378,955 சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான கைவிடப்பட்ட கையிருப்பு மற்றும் அலகொன்றின் சரியான விலை பயன்படுத்தப்படாததால் எஞ்சிய கையிருப்பின் கிரயம் ரூபா 47,656 குறைவாகக் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பேணப்படும் ஆவணங்களின் பிரகாரம், 4 சத்திர சிகிச்சைப் பொருட்களும் 2 பரிசோதனை வகை பொருட்களின் பொருட்டும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த கட்டணக் கூட்டுத்தொகை ரூபா 20,346,500 ஆகும். எனினும், காசேட்டின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 19,389,750 ஆகியமையால் ரூபா 956,750 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமிக்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 138, 245 மற்றும் 257 | மீளாய்வாண்டின்போது 5 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்குரிய ரூபா 3,276,632 சான்றுபடுத்தப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 756(1) | மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2016 ஜுலை 01 ஆந் திகதியளவிலும் நடைபெறவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 அந்திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | சகல நிலையான சொத்துக்களது தகவல்களையும் உள்ளடக்கியவாறு நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தி | ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளைத் தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயினும், |

5

| | |
|---|---|
| | ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்படவில்லை. |
| (ஈ) 2006 சனவரி 25 ஆந் திகதிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9 ஆம் பந்தி | வழங்குனருடன் எழுத்துமூல உடன்படிக்கையில் ஈடுபடாது மீளாய்வாண்டில் ரூபா 1,178,100 கிரயமுடைய இரண்டு Defibrillator இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (உ) 2014 ஏப்ரல் 30 ஆந் திகதிய டீஎம்எஸ்/1756 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இசைவாக வைத்தியசாலைப் பதவியணியினர் மீள் வியூகத்திற்கு உட்படுத்தப்பட வேண்டுமெனக் கடிதத்தின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஊ) 2015 மே 28 ஆந் திகதிய 01-21/2015 ஆம் இலக்க சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பொதுச் சுற்றறிக்கையின் 17 ஆம் இலக்கப் பட்டோலை | அரசாங்கத்திற்குக் குறைந்த கிரயம் ஏற்படும் விதத்தில் பச்சையான உணவுப் பொருள் கட்டளை வழங்கல், பெறுதல், சமைத்தல், விநியோகித்தல் தொடர்பான முகாமைத்துவத்தின் பொருட்டு உணவு முகாமைத்துவக்குழு ஒன்று நியமிக்கப்படவில்லை. |
| (எ) ஔடத முகாமைத்துவக் கைநூல் | |
| (i) 3 ஆம் அத்தியாயத்தின் 4(இ) பந்தி | ஔடத முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை மாதாந்தம் நடாத்தி அதன் முன்னேற்றம் குறித்து உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. |
| (ii) 5 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பந்தி | ஔடதக் கையிருப்பு தொடர்பாக குறைந்தளவு கையிருப்பு மட்டம், ஆகக் கூடிய கையிருப்பு மட்டம், மீளக் கட்டளையிடல் மட்டம், பாதுகாப்பான கையிருப்பு மட்டம் என்பன பேணப்படவில்லை |

## 3. நிதி விளைவுகள்

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான வைத்தியசாலைச் சபையின் நிதி விளைவுகள் ரூபா 20,023,884 பற்றாக்குறை ஆகும். இதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,558,018 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளில் ரூபா 23,581,902 வீழ்ச்சி தென்பட்டது. மீளாய்வாண்டில் அரச மானியம் ரூபா 29,000,000 அதிகரித்தபோதும், வேதனம், ஊழியர் நலன் மற்றும் வழங்கல் சேவைச் செலவினம் என்பன ரூபா 52,101,756 அதிகரித்தமையே மேற்படி வீழ்ச்சிக்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2011 ஆம் ஆண்டில் ரூபா 3,944,390 பற்றாக்குறையாக இருந்த நிதி விளைவு 2012 ஆம் ஆண்டளவில் ரூபா 3,646,870 மிகையாகியதுடன், 2013 ஆம் ஆண்டில் அது மீண்டும் ரூபா 20,378,939 பற்றாக்குறையாக இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 3,558,018 மிகை ஆகியது. 2015 ஆம் ஆண்டில் நிதி விளைவுகள் ரூபா 20,023,884 பற்றாக்குறை ஆகியது. ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான தேய்மானம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளப்படுமிடத்து 2011 ஆம் அண்டில் ரூபா 65,644,194 ஆகவிருந்த சபையின் பங்களிப்பு 8 முதல் 59 சதவீத மாற்றங்களுடன் 2015 ஆம் ஆண்டில் ரூபா 119,370,321 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1999 இன் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், இச்சபையின் நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் நோயாளிகளைக் கவனத்துக்கொள்ளும் நிறுவனமாக இதனை வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பது சபையின் பணியாகும். இப் பணிகள் நிறைவேறுதல் தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டபோது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் வெளிவாரியாகவும் மருத்துவ மனையில் தங்கியும் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளிகளது மொத்த எண்ணிக்கை முறையே 294,786 மற்றும் 323,362 என்பனவாகும். முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 சதவீத நோயாளர் அதிகரிப்பு தென்பட்டது. முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் வைத்தியசாலை ஒட்டுமொத்தச் செலவினம் முறையே ரூபா 217,597,454 மற்றும் ரூபா 273,524,255 என்பனவாகும். ஒட்டுமொத்தச் செலவின அதிகரிப்பு 26 சதவீதம் ஆகும். அதில் ஔடதங்களின் செலவு அதிகரிப்பு 24 சதவீதம் ஆகும்.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கதிரியக்கப் பரிசோதனைகளது எண்ணிக்கை 970 அதாவது 21 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியபோதும், கதிரியக்கப் பரிசோதனைப் பொருட்களின் செலவினம் அசாதாரணமாக 150 சதவீதத்தால், அதாவது ரூபா 340,923 அதிகரிப்புள்ளாகியிருந்தது.

(இ) 2015 பெப்ரவரி மாதத்தில் நிர்மாண வேலை முடிவடைந்திருந்த மூன்று மாடிக் கட்டிடத்தில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் Laboratory, Chronic Ulcer Care Unit, Utility Rooms and Wound Care Unit போன்ற பிரிவுகளை நிறுவத் திட்டமிடப்பட்ட போதும், 2016 ஜுன் 30 ஆந் திகதியளவிலும் அப் பிரிவுகள் நிறுவப்படவில்லை.

## 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியசாலையின் ஒவ்வொரு பிரிவுகளினதும் தேவைகளைக் கருத்திற்கொண்டு முறையாக வருடாந்த ஔடத மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்களின் தேவையை மதிப்பிடாததால் மீளாய்வாண்டில் ஔடத மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்களின் மதிப்பீட்டில் உள்ளடங்காத ரூபா 8,453,826 கிரயமுடைய 30 வகையான ஔடதங்களையும் சத்திர சிகிச்சைப் பொருட்களையும் வெளி வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, மருத்துவ வழங்கல் பிரிவால் ஔடதங்கள் கொள்வனவு செய்யப்படாமல் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்திடமிருந்து. கூடிய விலையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 14,493,024 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) கையிருப்புப் பதிவேடுகள் முறையாகப் பேணப்படவில்லை. அவை சரிவர இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, கையிருப்புப் பதிவேடுகளில் எதிர்மறை மீதிகள் ஏற்பட்டிருந்தன. அம்மீதிகள் அகற்றப்படும் விதத்தில் 32 வகையான ரூபா 1,456,887 கிரயமுடைய ஔடதங்களும்

சத்திர சிகிச்சைப் பொருட்களும் கையிருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(இ) ஔடதங்களுக்கும் சத்திர சிகிச்சைப் பொருட்களுக்கும் கட்டளைகளை வழங்குதல், பொறுப்பேற்றல், வழங்குதல், கையிருப்புப் பதிவேட்டைப் பேணுதல் மற்றும் கையிருப்புக் களஞ்சியத்திற்குப் பொறுப்பாகப் பணியாற்றுதல் சம்பந்தமான பணிகளில் வேலைகள் பகிர்ந்து அளிக்கப்படும் விதத்தில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை பேணப்படாததுடன் அப்பணிகள் யாவும் ஒரே உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டும் இருந்தன.

4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியாலைத் தேவைக்கதிகமான கூடிய ஆற்றலுடைய இரண்டு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் அந்த இரண்டு இயந்திரங்களும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. விபரம் வருமாறு.

(i) 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,500,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட Fully Automated Hematology Analyser இயந்திரத்தின் அதி கூடிய ஆற்றல் மணி ஒன்றிற்குக் குறைந்தது பரிசீலனைக் கூறு 60 ஆகும். எனினும், மீளாய்வாண்டின்போது மணி ஒன்றிற்குப் பரிசீலனைக் கூறு 17 மாத்திரம் நிலவியது.

(ii) 2013 ஆம் ஆண்டில் ரூபா 8,736,000 செலவழித்துக் கொள்வனவு செய்யப்பட்ட Fully Automated Biochemistry Analyser இயந்திரத்தின் மூலம் ஆற்றப்படக்கூடிய 21 வகைப் பல்வேறு பரிசோதனைக்களுக்கிடையே மீளாய்வாண்டில் 9 வகைப் பரிசோதனைகள் மாத்திரம் நடைபெற்றிருந்தன. மேலும், இவ்வியந்திரத்தின் அதி கூடிய ஆற்றல் மணி ஒன்றிற்குக் குறைந்தது பரிசீலனைக் கூறு 300 ஆயினும், மீளாய்வாண்டின்போது மணி ஒன்றிற்கு பரிசீலனைக் கூறு 15 மாத்திரமே நிலவியது.

(ஆ) நன்கொடையாக 2013 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 38,000 பெறுமதியான Nebulizer இயந்திரம் ஒன்று 2016 ஜூன் 23 ஆந் திகதியளவிலும் பாவனையின்றி இருந்தது.

(இ) 2000 ஆம் ஆண்டில் ரூபா 765,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கண் சத்திரசிகிச்சைக்கான Operating Microscope உபகரணம் 6 ஆண்டுகளுக்கு மேலாகப் பாவனை இன்றியிருந்தது.

## 4.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயுவுகூடக் கட்டிட நிர்மாண வேலையை ரூபா 12,431,157 பெறுமதியான ஒப்பந்தத்திற்கு வழங்கிய ஒப்பந்தகாரரிடமிருந்து 112 நாட்கள் தாமதத்தின் பொருட்டு தாமதக் கட்டணமாக ரூபா 672,000 ஐ அறவிடவில்லை. சுவர்களும் ஓடுகளும் வெடிப்புடன் காணப்பட்டமை, கதவுகளின் பிணைப்பு உடைந்திருந்தமை, கூரையிலிருந்து நீர் கசிதல் மற்றும் சீலிங் பலமற்றிருத்தல் போன்ற குறைபாடுகளுடன் நிர்மாண வேலை நடைபெற்றிருந்ததுடன் ஆலோசகரால் முறையான மேற்பார்வையே கண்காணிப்போ மேற்கொள்ளப்படவுமில்லை.

(ஆ) ஆய்வுகூடக் கட்டிடத்தின் முதலாம் மாடியை பகிர்ந்து அமைத்தல் (Partition) மற்றும் யன்னல்களில் கிறில் (Grill) பொருத்துதல் போன்ற ரூபா 817,435 பெறுமதியான ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தகாரருடன் எழுத்துமூல உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தின் தவறுகளை நிவர்த்தி செய்யும் காலப்பகுதி வரும் வரையும் ஒப்பந்தத்தின் ஆகக் கூறைந்த தொகையான நூற்றுக்கு 5 சதவீதத்தை நிறுத்தி வைக்காதும் ஆலோசகரது பரிந்துரையுடனான சான்றிதழின் கூடிய அளவைப் பத்திரங்களுடன் இறுதி வேலைக்குரிய விலைப்பட்டியலைச் சமர்ப்பிக்காதிருக்கையில் முழுத் தொகையான ரூபா 817,435 ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) வைத்தியசாலைக் காணியில் 1,190 கியூப் மண்ணை நிரப்பி நில மட்டத்தை உயர்த்தவதற்கு கியூப் ஒன்றிற்கு ரூபா 3,500 வீதப்படி அதி குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்திருந்த கூறு விலையாளருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதும், ஒப்பந்தகாரரால் பின்னர் விடுவிக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் 1 கியூப்பிற்கு ரூபா 4,200 வீதம் கொடுப்பனவு செய்தமையால் ரூபா 828,576 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 216 ஆகும். உள்ளவாறான பதவியணி 195 ஆகும். மருத்துவ மனையின் பிரதான நிறைவேற்றுதரப் பதவியான மருத்துவ மனைப் பணிப்பாளர் பதவி 10 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக இருந்த போதும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன், பதவியணியை அதிகரிக்கும் அங்கீகாரமின்றி 08 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்டிருந்த நினைவிழக்கச் செய்யும் விசேட வைத்திய நிபுணர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன், மீளாய்வாண்டின்போது வெளிவாரி நினைவிழக்கச் செய்யும் மருத்துவர் ஒருவரது சேவையைப் பெறுவதற்கு ரூபா 314,000 செலவிடப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ ஆய்வுகூடத் தொழில்நுட்பப் பதவிகளில் 3 வெற்றிடங்கள் நிலவியதன் காரணமாக, ஆய்வுகூடத்தில் உள்ள அதிக ஆற்றல் மிக்க ஆய்வுகூட உபகரணங்கள் போதியளவு சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்தது.

(ஈ) மருத்துவ மனையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாமையால் அரசாங்க சேவையில் முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்க்கும் நடைமுறை உபயோகப்படுத்தப்பட்டபோதும், அந்த ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளைக் கருத்திற் கொள்ளாது தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் என்பவற்றிற்கு 45 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சைக்கு 20 புள்ளிகளும் என வழங்கி, ஆட்சேர்க்கும் வயதெல்லையை உயர்த்தி மருத்துவ மனையில் ஏற்பனவே பயிற்சி பெற்றவாறிருந்த 4 பேர் முகாமைத்துவ உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டபோதும், அது 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈஆ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமையத் தயாரிக்கப்படவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டபோதும், நிறுவனத்தின் நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் அதில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் தயாரிக்கப்பட வில்லை.

### 5.3 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூட்டம் நடாத்தப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்காக 1 கணக்காய்வுக் குழுக் கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றுக்கிடையே 27 முதல் 420 சதவீதம் வரையான வேறுபாடுகள் நிலவின. மேலும், 5 விடயங்களுக்கு மதிப்பிடப்பட்ட ரூபா 2,775,000 முற்றாக எஞ்சியிருந்தது. இதன் பிரகாரம், மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது வைத்தியசாலைச் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|
| (அ) கொள்வனவு மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள் | நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் சம்பந்தமாகச் சிறந்த மேற்பார்வை இன்மையும் அதிகூடிய செயலாற்றலைப் பெற நடவடிக்கை எடுக்காமையும். |
| (ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு | கையிருப்புக் கட்டுப்பாடு சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணப்படவில்லை. |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | குறித்த சுற்றறிக்கை ஆலோசனைக்கமைய பதவியணியினர் ஆட்சேர்க்கப்படாமை. |
| (ஈ) பச்சை உணவுப்பொருட்கள் வழங்கலும் நோயாளர்களுக்கு உணவு வழங்கலும் | பச்சை உணவுப் பொருட்கள் வழங்குதல் தொடக்கம் நோயாளர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வரையான நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படாமையும் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை பேணப்படாமையும். |

ஒப்பம் : எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி